திராவிடநாடு

31-1-60 | வார வெளியீடு | விலை 16 காசு

எழில்

—[பழமன்]—

அந்தி மாலை வேளையிலே
ஆறு வயதுச் சிறுமங்கை
மந்தை யோரம் மாடோட்டி
மெல்ல நடந்து செல்கையிலே
கந்தை உடையை அவள்வாயால்
கடிக்கும் எழிலை என்னென்பேன்!
விந்தை உலகு தனிலிங்கே
வறுமை பெற்ற எழிலிதுவாம்!

மெல்ல வீசும் தென்றலினால்
எண்ணெய் ஏதும் அறியாத
வல்லி அவளின் சிறுகூந்தல்
கண்ணை மூடி மறைத்ததனால்
மெல்லி தான தன்கையால்
ஒல்லை அதனை வாங்கிவிடும்
எல்லை யற்ற பேரெழிலை
என்ன வென்று நான்சொல்வேன்?

ஓட்டிச் செல்லும் அவள்மாட்டின்
ஒலிக்கும் மணியின் இன்னிசையைக்
கேட்டுப் பெரிதும் மகிழ்வுற்ற
கன்றுக் குட்டி குதித்தாடிப்
பாட்டும் பண்ணும் தோற்கின்ற
பாசக் குரலில், அன்புப்பால்
ஊட்டும் வாயில் அம்மாவென்(று)
அழைக்கும் எழிலை என்னென்பேன்!

மாடு கட்டி மேயவிட்டு
மாலை நேரம் மயங்கு முன்
வீடு நோக்கி நடக்கின்றாள்!
வாயில் முன்பு அவளன்னை
பாடு பட்ட சலிப்பாலே
ஓய்வு பெற்று அமர்ந்துள்ளாள்!
கூடு புக்க வந்துற்ற
குஞ்சை அணைக்கும் எழிலென்னே!

கூழிருக்கும் பானை யிலே!
குடிப்பதற் குப்பசி உண்டு!
வாழ்வளிக்கும் தந்தை இன்னும்
வரவில்லையே என்றி ருப்பர்!
நாள் முழுதும் உழைத் திட்ட
நல்லவனும் மெல்ல வந்து
நீள்கரத்தால் மகளை அணைத்தான்!
நீந்தியோடும் எழிலென்னே!

தாயெழுந்து சோறெ டுத்துத்
தட்டினிலே படைத்து வைக்கச்
சேயெழுந்து குவளை யிலே
நீரெடுத்துப் பாங்கில் வைக்கக்,
காய்ந்தெழுந்த பசி அடக்கிக்
கதைகள் பேசி மகிழ்கின்றார்!
ஆய்ந்தறிந்து கூறு கின்றேன்,
அவனிமீதில் எழிலிதுதான்!

"அம்மா"

அ. வீ. முகிலன்

அன்புள்ள அம்மா!

நீங்கள் வரைந்த கடிதம் கண்டு ஒரு புறத்தே மகிழ்ச்சியும், இன்னொருபுறத்தே வேதனையும் அடைகின்றேன். நான் இந்தப் பொங்கல் விழாவிற்கு வீட்டிற்கு வந்து சேராததைப்பற்றி, மிக்க கவலைகொண்டுள்ளீர்கள் என்பதை நினைக்கும்போது மிக்க வேதனை அடைகின்றேன். நண்பன் எழிலைப்பார்த்து விட்டு, வீடு திரும்பவேண்டும் என்றுதான் நினைத்தேன்; ஆனால் முடியவில்லை. நான் வராமையை நினைத்து நீங்களும் பொங்கல் உண்ணவில்லை; அல்லியும் அன்று அழுதே கண்ணீர்வடித்து, கன்னிப் பொங்கல் விழாவிற்குக்கூட மற்றத் தோழியர்களுடன் கலந்துகொள்ளாமல் வீட்டிலேயே கழித்துவிட்டாள், என்று மிக்க வருத்தத்தோடு, அன்புடன் கடிதம் வரைந்துள்ளீர்கள்...உண்மையாகவே என் மனமும் இங்கு அமைதியில்லாமல்தான் இருந்தது! முதலில் அங்குவராமல் நின்ற காரணத்துக்காக அல்லியும் நீங்களும் என்னை மன்னிக்க வேண்டும்.

தாயை இழந்து, தந்தையோடு இருக்கும் அல்லிக்கு நீங்கள்தான் அம்மாவாகவும், அத்தையாகவும் துணைபுரியவேண்டும். முன்பெல்லாம் உங்களை அம்மா அம்மாவென்று அழைத்தவள், இன்று அத்தை, அத்தையென்று பலமுறை அழைத்து மகிழ்கின்றாள். அவ்வளவு அன்பை அவள் உங்களிடம் வைத்திருக்கும்போது, எப்படியும் அல்லியை அமைதிபடுத்தியிருப்பீர்கள் என்று சிந்தித்துத்தான் இங்கேயே இருந்துவிட்டேன். நான் இங்கிருக்கும் வேலையை முடித்துக்கொண்டு விரைவிலேயே ஊர்வந்து சேர்ந்துவிடுகின்றேன். அதுவரை அல்லியும், நீங்களும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று உங்களை விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன். நான் அங்குவந்ததும் அல்லியின் கோபம் எல்லாம் பறந்தோடிவிடும் என்பதும் எனக்கு நன்கு தெரியும். இருப்பினும் நான் அங்குவராமல் நின்ற காரணத்தை நீங்கள் நினைத்துப் பார்ப்பீர்களானால், நீங்களும் அமைதியடைவீர்கள் என்பது எனக்கு நன்குதெரியும். இங்கே, எழிலின் தாத்தாவும், பாட்டியும்தான் எழிலையும் அவன் தம்பி, தங்கைகளையும் கவனித்து வருகிறார்கள் என்பதை நான் உங்களுக்குப் பலமுறை கூறியிருக்கின்றேன்...எழிலின் அப்பாவும், அம்மாவும் பிழைப்பதற்காக அண்டைநாடான இலங்கைக்குச் சென்றார்கள். அங்கே தேயிலைத் தோட்டத்திலே, அல்லும் பகலும் அயராதுஉழைத்து, மிஞ்சியபணத்தை அனுப்பி, இங்கிருக்கும் குழந்தைகளைப் படிக்கவைத்துக் காப்பாற்றும்படி, பெற்றோரை வேண்டிக்கொண்டிருக்கின்றார்கள். அவருடைய பெற்றோர்களும் கண்களை இமை காப்பதுபோலக் காத்து வருகின்றனர் ... ஆனால் அவர்கள் அனுப்பி வந்த பணத்திற்கும் இப்போது தடை! அது மட்டுமா? அவர்கள் தங்கள் குழந்தைகளை இரண்டாண்டுகளுக்கு ஒரு முறையாவது வந்து பார்த்து மகிழ்ந்தார்கள். ஆனால் அதற்கும் இப்போது தடை! அவர்கள் அதையும் மீறி வரமுடியாது; அப்படி மீறி வந்தால் அங்கே அவர்களுக்கு வாழ உரிமை கிடையாது! பார்த்தீர்களா அம்மா இந்தக் கொடுமையை! தந்தைக்கும், தாய்க்கும் இலங்கையிலே குடியுரிமை; தன்மக்களுக்குத்திராவிடத்திலே குடியுரிமை!...பெற்றோர்கள் தங்கள் உள்ளத்தையெல்லாம் தன் குழந்தைகளிடம் ஒப்படைத்துவிட்டு, அங்கே நடமாடும் உருவங்களாக உழைக்கின்றனர்.

பொங்கல் விழாவிலே, அவர்கள் அங்கே கண்ணீரைப் பொங்கி வடிக்கின்றனர்! குழந்தைகள் இங்கே தங்கள் நிலையை எண்ணிப் பெருமூச்செடுகின்றனர். தமிழர் திருநாளிலே எல்லோரும் நிம்மதியோடு இருக்கின்றார்களா பார்த்தீர்களா அம்மா!...இன்னும் எத்தனை குடும்பங்கள் இதுபோன்று காட்சியளிக்கின்றனவோ, என்று நினைக்கும்போதே கண்களில் நீர் ஊற்றுக் கிளம்புகின்றதம்மா!... இதற்கெல்லாம் அரசாளுபவர்கள் தானே காரணம்?

ஆனால் ஆட்சிப்பீடம் எதைக் கேட்டாலும் வடக்கே கைகாட்டி நிற்கின்றது...பல்லாயிரம் மக்கள் நம்மவர் அயல் நாடுகளுக்குச் சென்று கூலியாக உழைக்கின்றனர்; ஆனால் இங்கே—"கவர்னர்" என்ற இடத்தில் வடவரை வைத்துக்கொண்டு ஆண்டொன்றுக்கு பத்துஇலட்சப் ரூபாயைச்செலவழிக்கின்றனர். இது தேவைதானா?... பல்லாயிரம் மக்கள் சென்னை போன்ற இடங்களில், வானமே கூரையாகவும், நிலமேப் படுக்கையாகவும், தமது கைகால்களே ஆடையாகவும் கொண்டு படுத்துறங்குகின்றனர். ஆனால் இதையெல்லாம் ஆட்சிப்பீடத்தில்உள்ளவர்களால் கவனிக்க முடியவில்லை!

அதுமட்டுமா அம்மா!... இந்தியாவின் முடிசூடா மன்னரின் சகோதரிக்காக, செலவிடப்படும் தொகை எவ்வளவு தெரியுமா, அம்மா! ... ஆண்டொன்றுக்கு ஆறரை கோடி ரூபாய்!...இவர்கள்தான் நாட்டின் நல்லுறவை ஏற்படுத்துகின்றனராம்!...

ஒரே வயிற்றில் பிறந்த அண்ணனும், தம்பியும் இருக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்வோம்... அண்ணன் மட்டும் தனியே உண்டு கொழுத்து வளர்கின்றான்; தம்பியோ எலும்புந் தோலுமாக காட்சியளிக்கின்றான்! பல நாட்கள் தான் பட்ட வேதனையை எல்லாம் ஒன்று திரட்டித் தாயிடம் கேட்கிறான், "ஏம்மா! அண்ணன் மட்டும் சம்பாதிக்கும் பணம் முழுவதையும் செலவழித்து உல்லாசமாக வாழ்கிறான்! ஆனால் 'எனக்கு உண்ணுவதற்கும் சரிவர உணவு கிடைப்பதில்லை, உடுப்பதற்கும் உடை கிடைப்பதில்லை, தங்குவதற்கும் சரிவர இடம் கிடைப்பதில்லை' என்று கேட்டால், தாய் அதற்கு என்ன பதில் கூறவேண்டும்! 'ஆமாப்பா! அவனை மட்டும்தான் இதுவரை கவனித்துக்கொண்டு வந்துவிட்டேன். அது என்னுடைய தவறுதான். இனிமேல், உன்னையும் அந்நிலைக்குக் கொண்டுவரப்பாடுபடுகிறேன் என்று சபதம் எடுத்துக்கொள்ளவேண்டும். அதுமட்டும் போதாது, உடனே அந்த மகனை அன்போடு அழைத்து, அணைத்து முத்தமிட்டு,

(14-ம் பக்கம் பார்க்க)

இனிப்பும்—கசப்பும்!

ர் 18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (31—1—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 27, 28, 29

கனம் வெங்கட்டராமன் அவர்கள் வெளிநாடு சென்று திரும்பி வந்ததும் ஒரு 'இனிப்பான' செய்தியைத் தந்தார் நமக்கு! 'சேலத்திலே' பரவலாகக் காணப்படும் கனிப்பொருளை அகழ்ந்தெடுப்பதுபற்றி ஆராயக் 'கிழக்குச் செர்மன்' தொழில் வல்லுநர்களை அழைப்பதெனச் சென்னையரசு எண்ணியுள்ளதாக அறிவித்த செய்திதான் அது!

அதற்கான காரணத்தையும் அமைச்சரே கூறியிருக்கிறார்! 'வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தின் போது, தான் 'கிழக்குச்செர்மனி' சென்றிருந்ததாகவும், அங்கு 'கால்பே' என்ற இடத்திலுள்ள தொழிற்சாலைகளைப் பார்த்ததாகவும், அதில் நூற்றுக்கு இருபது பங்கு கலவை உள்ள இரும்புத்தாதுக்கள், பழுப்பு நிலக்கரியின் உபயோகத்தோடு சிறந்த முறையில் பிரித்தெடுக்கப்பட்டு குறைந்த விலையில் இரும்பு தயார் செய்யப்படுவதாகவும் அவருக்கு விளக்கப்பட்டதாம்.

இதை அமைச்சர் தன் இருகண்களாலும் கூர்ந்து பார்த்தாராம். உடனே தமிழகத்துச் சேலம் அவர் கண்ணிற்குத் தெரிந்ததாம். இங்கோ இரும்பின் இருப்பு நூற்றுக்கு இருபது பங்கிலும் குறைவு; ஆனால் 'சேலத்தில்' நூற்றுக்கு முப்பத்தாறு முதல் முப்பத்தெட்டாக இருக்கிறது! எரிப்பதற்கு வேண்டிய பழுப்பு நிலக்கரியும் பக்கத்தில் இருக்கிறது! எனவே ஏன் இங்குபோல் சேலத்திலும் தொழிற்சாலை அமைக்கக்கூடாது என்னும் எண்ணம் ஓடியிருக்கிறது. அப்படி ஆரம்பிக்க இருக்கும் தொழிற்சாலைக்குக் கிழக்குச் செர்மனி வல்லுநர்களின் திறமை நல்லதாக அமையுமே என்னும் உணர்ச்சி வேறு அவரைப் பிடித்து ஆட்டியிருக்கிறது. அதனால்தான் 'டில்லி' கவனிக்காவிட்டாலும் பரவாயில்லை என்ற எண்ணத்தினால்தானே என்னவோ தெரியவில்லை அவர்களின் உதவியைக் கேட்டிருக்கிறார்!

இதைத்தான் சென்னை அரசின் எண்ணம் என்பதாக வெளியிட்டுள்ளார்—அமைச்சர்!

சேலத்து இரும்பு இன்று நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டதல்ல! எத்தனையோ ஆண்டுகட்கு முன்னே அதன் பயன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஆட்சியாளர்களின் மனவளம்தான் இல்லை—அதை உபயோகிக்க! இதை நாம் எடுத்துக்காட்டி—"சேலத்து இரும்பு தூங்குகிறதே ஏன்?" என்று பேசிடும்போது, கனம் காமராசர் அவர்கள் தெளிவானதோர் விளக்கம் (!) தந்தார்கள்.

"சேலத்து இரும்பு யாராலோ தோண்டப்பட்டுவிட்டதுபோல் பேசுகிறார்கள் தி. மு. கழகத்தினர். அவர்கள் அப்படிக் கவலைப்படவேண்டாம். அது எங்கும் போய்விடவில்லை. பூமிக்கடியில்தான் இருக்கிறது" என்ற முறையில் விளக்கம் தந்தார்கள்!

கனம் காமராசருக்கு அதன் பொருளாதார நோக்கம் புரியாதிருப்பதுகண்டு நாம் ஆச்சரியப்படவில்லை. இவரைத் தலைவராகக்கொண்டிருக்கிற அமைச்சரவையில் விருப்போடு அதன் திறத்தை—நாட்டுக்கு அதனால் ஏற்படும் நன்மையைக் கருதி 'கி. செர்மன்' வல்லுநர்களை அழைக்கக்கூடிய அமைச்சரும் இருக்கிறாரே என்பதில்தான் நமக்கு முதல் இனிப்பு!

அடுத்தபடியாக, இவ்வளவு நாட்களாகக் கேளாக் காதினராய் — வஞ்சனை செய்வோராய் இருந்து வந்தனர் டில்லி பீடத்தில் கொலுவேறியிருப்போர்; இப்போதாவது சென்னையரசே ஆராய்ச்சியாளர்களை அழைக்க எண்ணியிருப்பதால் இனி அவ்வேலை துரிதமாக நடைபெறலாம் என்ற மகிழ்ச்சி—இரண்டாவது இனிப்பாகும்.

ஆனால், சற்றுச் சிந்திக்கும்போது இந்த இரு இனிப்புக்களுமே கசந்துவிடுகின்றன! காரணம் என்ன? இதற்குப் பதில் அளிப்பதுபோல 25—12—'59ம் தேதிய "தமிழ்நாடு" நாளிதழின் தலையங்கம் அமைந்துள்ளது. அதுவருமாறு:—.

"சேலம் மாவட்டத்தில் பரவலாகக் காணப்படும் இரும்புக் கனிப்பொருளை அகழ்ந்தெடுப்பதுபற்றி ஆராயக் கிழக்கு செர்மன் தொழில் வல்லுநர்களை அழைப்பதெனச் சென்னையரசு எண்ணியுள்ளதாக அமைச்சர் திரு. வெங்கட்டராமன் கூறியிருப்பது மகிழ்ச்சிக்கு மாறாக ஏமாற்றத்தையே அளிக்கிறது.

ஏனெனில் கடந்த பல ஆண்டுகளாக இந்திய நில உட்கூறு வல்லுநர்களும், வெளிநாட்டு நிபுணர்களும், அவ்வப்போது மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனாகச் சேலத்தில் கிடைக்கும் இக் கனிப்பொருளின் தரம் மிக உயர்வாக இருப்பதாகவும், அதில் 36 முதல் 38 சதவிகிதம் இரும்புக் கலவை சேர்ந்துள்ளதாகவும், விவரங்கள் வெளியாயின. எனினும் இப்படிவங்களை அகழ்ந்து இரும்பு உற்பத்தி செய்வது சிக்கனமாக இராது என்ற போலிக் காரணத்தை மத்திய அரசு அண்மைவரை கூறிவந்தது.

ஆனால், பல வெளிநாடுகளில் இதனினும் குறைந்த சதவிகிதத்தில் இரும்புக் கலவையும் இலாபமான முறையில் பிரித்தெடுக்கப்படுகிறது. எடுத்துக் காட்டாகக் கிழக்கு செருமனியில் "கால்பே" என்னுமிடத்தில் இருக்கும் கனிப்பொருளில் நூற்றுக்கு இருபது பங்கிற்கும் குறைவான அளவில் அமைந்துள்ள கலவையையும் சிறிதும் வீணாக்காமல் பழுப்பு நிலக்கரியை எரித்துச் சிறந்த உலைக்களமுறையில் மிகக் குறைந்த செலவில் இரும்பு உற்பத்தி செய்கிறார்கள். இவ்வுண்மை இந்திய அரசு அறியாததன்று. எனவே தென்னகத்தின் வேண்டுகோளை புறக்கணிக்க மாற்று முறையை அவர்கள் கையாண்டனர். அஃதாவது, தமிழ் நாட்டில் நிலக்கரி கிடைக்காததால் சேலத்தின் இரும்பைப் பிரித்தெடுத்துப் பயன்படுத்துதல் இயலாத செயல் என அவர்கள் வாதித்தனர். ஆயினும் நல்வினைப் பயனாக நெய்வேலியில் நமது தேவையை நிறைவு செய்யும் அளவிற்கு நல்ல காடுள்ள பழுப்பு நிலக்கரி கிடைக்கும் என்பது உறுதியாகிவிட்டது.

இதையொட்டி இரண்டாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் எப்படியும் சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை அமையும் எனத் தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். எனினும், அவர்கள் எண்ணம் ஈடேறவில்லை. பயன் கிட்டும் என்ற நம்பிக்கை இல்லையெனினும், வடநாட்டுப் பாலைவனங்களில் எண்ணெய் தேடிப் பெரும் செலவிட்டு அலையும் மத்திய அரசு காவிரிப் படுகையில் பெருமளவில் எண்ணெய் கிடைக்கும் என்றறிந்தும் வாளா இருப்பதைப் போன்றே சேலத்தின் கரும்பொன்னைப் பற்றியும் கவலையின்றிக் காலங்கழித்து வருகிறது.

இங்நிலையில், அடுத்த திட்டத்திலேனும் சேலத்தில் பெரியதோர் இரும்பு எஃகு உற்பத்தி நிலையத்தை நிறுவத் தவறக்கூடாதென மத்திய அரசைச் சென்னை ஆட்சியினர் வற்புறுத்துதலே நியாயமாகும். எனினும் அத்தகைய செயலை மேற்கொள்ளாது மீண்டும் ஆராய்ச்சி வேலையில் ஈடுபடப்போவதாகத் தொழில்துறையமைச்சர் அறிவித்திருப்பது மனநிறைவளிப்பதாக இல்லை. ஏனெனில், புதிய ஆராய்ச்சி காலங்கடத்தும் வாய்ப்பினையே மீண்டும் தோற்றுவிக்கக்கூடும்."

பல்லாண்டுகளாக "டெல்லி" உங்களை ஏமாற்றி வருகிறது. எனவே அதன்மீது பாய்ந்து அடுத்த திட்டத்திலாவது சேர்க்கச் செய்யுங்கள். உங்களது அந்த "மீண்டும் ஆராய்ச்சி" தேவையில்லை என்று "தமிழ்நாடு" எடுத்துக் காட்டும்போது இனிப்புக்கு இடம் எங்கே?

அதோ "டெல்லி" தெரிகிறது! அதன் ஓரவஞ்சனையும் தெளிவாகிறது! களிப்பு எங்கோ ஓடி விட்டது!

தமிழகத்தில் கனிவளம் ஏராளம் புதைந்து கிடக்கிறது! அதைத் தோண்டி எடுக்கும் "மனம்"தான் வரவில்லை டில்லிக்கு!

இதோ சேலத்துக் கனிபற்றி 19—12—'59ம் தேதிய சு. மி. தனது தலையங்கத்தில் குறிப்பிடுவதைப் பாருங்கள்:—

"தற்போதைய உருக்கு உற்பத்திச் சாலைகள் அநேகமாக அனைத்தும் வட இந்தியாவிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. தென்னிந்தியா தொழில் வளத்தில் பின் தங்கி இருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இத்துறையில் தேச முழுவதும் சீராக முன்னேற இத்தகைய சில பெரிய தொழிற்சாலைகள் தென்னிந்தியாவில் ஏற்படுவது அவசியம். சென்னை இராச்சியத்தைப்பற்றியவரை அதற்கு அனுகூலமான இயற்கை வளங்கள் இங்கு இல்லாமலில்லை. சேலம் ஜில்லாவில் இரும்புக்கனி இருப்பது நெடுநாளாகத் தெரிந்த விஷயம். அதைக்கொண்டு முதல் தரமான இரும்பு—உருக்கு தயாரிக்க முடியுமென்று ஏற்கெனவே ஆராய்ச்சி நடத்திய சில நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர். அண்மையில் நெய்வேலி கரிச்சுரங்கங்கள் அமைந்திருப்பது ஒரு பெரிய பாக்கியமென்றே சொல்லவேண்டும்........." இப்படி எழுதிக்கொண்டு போகிறது சு. மி.

சேலத்து இரும்பின் நிலை இப்படியிருக்கிறது. தொட்டால் பொன்னாகும் தன்மையில் கிடக்கிறது—சேலத்துச் செல்வம்! ஆனால் அமைச்சரோ "மீண்டும் ஆராய்ச்சி" செய்ய என்று அடுத்த தேசத்தாரை அழைக்கிறார்! இது காலம் கடத்தும் செயலேயன்றி வேறு என்ன?

வளமிருக்கிறது! வாய்ப்பும் இருக்கிறது! ஆனால் "வழிதான்" இல்லை!

மழலை

குதிரைச் சத்தம் கேட்டது. அரை குறைத் தூக்கத்திலிருந்த திலகவதி விழித்துக்கொண்டாள். குதிரை, ஊர்முகப்பில் ஓடிக்கொண்டிருந்த உப்பாற்றுக்குள் வந்துகொண்டிருந்தது. நாரணத்தேவரைப் பத்து நாட்கள் பிரிந்திருந்து பார்க்கப்போகிற பேரார்வம் அவள் உடலெல்லாம் பனிப்பூக்கச் செய்திருந்தது. இராமனுதபுரத்திற்கு நாரணர் போன காரியத்தைப்பற்றிக்கூட அவள் கவலைப்படவில்லை. அவரைப் பார்த்தால் போதும் என்றிருந்தது அவளுக்கு!

குதிரை ஊருக்குள் வந்துவிட்டது. திலகவதி தாள்ப்பாளைத் திறந்தாள். குதிரை மந்தைப் பிடாரிக்கு அருகில் வந்துகொண்டிருந்தது. திலகவதி கண்களைத் தேய்த்துக்கொண்டு பார்த்தாள். அவளையுமறியாமல் அவள் கண்களில் நீர் பெருகிவிட்டது. ஊருக்கு வெளியே வெகுதூரம் போய்வரும் தன் கணவனை 'அப்பா' என்று அழைக்க ஒரு மழலை இல்லையே என்ற கவலை அவளை அரித்துத் தின்னத் தொடங்கிவிட்டது. எத்தனையோ முறை தனித்திருந்து துக்கித்திருக்கிறள்; புலம்பி அழுதிருக்கிறள்; எத்தனை சுகமிருந்தும் அவை யனைத்தையும் குழந்தையில்லாக் குறை விழுங்கிவந்தது. அந்நியர் குழந்தையானலும் அள்ளித் தழுவி ஆனந்திக்க வேண்டிய பெண்ணுள்ளம் திலகவதியைப் பொறுத்தமட்டில் குழந்தையில்லாக்குறை கவலையை வளர்க்கும் எரிதணலாகிவிட்டது. அவ்வளவு ஏக்கம் — பலவீனம்! பணத்தால் சுகம் பெற்றவர்கள் பணத்தை நேசிக்கிருர்கள். தேடித்தேடி அலைந்தும் பணம் கிடைக்காதவர்களுக்கு, பணம்—மற்றவர்கள் கையிலிருக்கும் பணம் கோபத்தைக் கிளறுகிறது; சோகத்தைக் கிளப்பிவிடுகிறது. திலகவதிக்குத் தன் மடியிலே குழந்தை இல்லையே என்ற கவலை, பிறர் மடிமீதுள்ள குழந்தைகள்மீதும் பாயத்தொடங்கியது. வாழ்வில் வளம்—உருவத்தில் கவர்ச்சி — என்ன தானிருந்தாலும் கொஞ்சி மகிழக் குழந்தையில்லையே என்ற துயரத்தை அவளால் தாங்கவே முடியவில்லை. திலகவதி உத்தமிதான் — ஊரார் அதைப் புகழவில்லை. அவள் பணக்காரிதான, ஊரார் அதைச் சொல்லிப் பெருமைப்படவில்லை. அவள் சிறந்த அழகிதான்; அந்தக் கிராமம் அதைக்கூடக் கூறவில்லை. ஆனல் அவள் மலடி என்பதை மட்டும் சுட்டிச் சுட்டிக் காட்டியது. நோயாளியின் வியாதியை என்ன என்று கண்டுபிடிக்க முடியாமல் கைதேர்ந்த மருத்துவர்கள் கூடத் திண்டாடுகிருர்கள். ஒரு பெண் இன்னொரு பெண்ணின் குறையைக் கண்டுபிடிப்பதில் மட்டும் தவறியதே இல்லை!

> சிவகங்கைச் சிற்றரசு இராணி வேலு நாச்சியாரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த காலத்தில் சிவகங்கைக்கு அருகிலுள்ள பெரிய கோட்டை என்ற கிராமத்தில் நடந்த சம்பவம் இது. அந்தச் சிற்றூரில்தான் இராணியின் இரகசியப் படைத்தளம் இருந்தது. இன்று அந்தக் கோட்டைத் தளம் மண்மேடாகிக் கிடக்கிறது.

குதிரை வாசலுக்கு வந்துவிட்டது. அவள் மனதில் அரும்புவிட்டிருந்த எண்ணத்தை நாரணரிடம் தெரிவித்துவிட முடிவுகட்டிவிட்டாள். அதைத் தவிர அவளுக்கு வேறு மார்க்கமிருப்பதாகப் படவில்லை.

நல்ல இருட்டு! திலகவதியின் கண்களில் கண்ணீர் சுரந்திருப்பதை நாரணர் கவனிக்கவில்லை.

"திலகா!"

"அத்தான்! போனகாரியம் முடிந்துவிட்டதா?"

"நாரணன் போனல் நடக்காததும் உண்டா? வா! ஏன உடம்பு வியர்த்திருக்கிறது? என்ன திலகா இது! கன்னம் கூடச் சிவந்திருக்கிறதே! விழித்துக்கொண்டே இருந்தாயா?......கனகம் எங்கே? தூங்கிவிட்டாளா?" — நாரணர் கேட்டுக்கொண்டேபோனர். திலகவதியின் பதிலை அவர் கவனிக்கவே இல்லை!

பேசிக்கொண்டே இருவரும் படுக்கையறைக்குள் போய்விட்டார்கள். நாரணர் முகத்தைத் துடைத்துக்கொண்டு கட்டிலில் அமர்ந்தார்.

"அத்தான்!"

"என்ன திலகா!.........உட்கார்! இங்கே, இந்த நேரத்தில் நீதான் எஜமானி. பகலவன் சுற்றிவரும் போதுதான் எங்களுடைய அதிகாரமும் மிரட்டலும்! இப்போது இரவு நேரம்! நிலாவின் பரிபாலனம் நடைபெறுகிறது. சும்மா உட்கார்!" என்று குழைவாகப் பேசினர் நாரணர். ஆனல் அது அவளுக்குச் சுவைதரவில்லை. போதையூட்டவில்லை. காரணம் அவள் மனம் உற்சாகத்தில் இல்லை. காய்ச்சல்காரன் நாவிற்கு கரும்புச் சாறுகூடக் கசக்குமே! அதுபோலத்தான் கவலை தோய்ந்த உள்ளமும்! காது கேட்காது; கண்களில் பாசி படிந்துவிடும்!—திலகவதி சிலையாக நின்ருள்.

"என்ன திலகா உனக்கு! உடம்புக்குக் கோளாறு? ஏன் இப்படிச் சோர்வாக இருக்கிறய்!"

திலகவதி பேசவில்லை. பொருமினள். வார்த்தைகள் வெடித்துக் கிளம்பின.

"அத்தான்!"

"சொல்லு திலகா!"

"என் முகத்தைப் பாருங்கள்!"

"ஏன், முகம் தாமரை போல் இருக்கிறது; கிளிமூக்கு; வெள்ளி மலர்போன்ற திருவிழிகள். கன்னங்கள் ஆமை ஓடு; நெற்றியோ ஆலிலை; என்ன திலகா உன் எழிலுக்கு?"

"குறை இருக்கிறது அத்தான். அந்தக் குறை என்னைக் குடைந்து

கொண்டே இருக்கிறது. நான் செத்துக்கொண்டே இருக்கிறேன். நேற்றைக்கு இருந்த என் எழில் இன்று குறைவு. நாளை இன்னும் குறையும். கவலையால் நான் சருகாகிவிடுவேன். காலந்தான் ஆயுளைக்கணிக்கும், இளமையைக்குறைக்கும் என்பது இல்லை. காலத்தைக் காட்டிலும் இத்திருப்பணிகளை விரைவாகச் செய்துமுடிக்கும் ஆற்றல்கவலைக்கும்ஏக்கத்திற்கும்இருக்கிறது. என்னைக் காலம் கொல்லப் போவதில்லை அத்தான்; கவலைதான் கொல்லப்போகிறது.'' என்று துடித்தாள் திலகவதி.

''திலகா! திலகா!''

திலகவதி படுக்கையில் சாய்ந்தாள். மயக்கம் தெளிந்து அவள் பேசினாள்.

''அத்தான். எனக்கு இந்த ஊர் பிடிக்கவில்லை. வேறு எங்காவது போய்விடலாம்.''

உனக்கென்ன பைத்தியமா திலகா? இராணி நாச்சியார் என்னை நம்பி ஒரு குதிரைப்படையையே ஒப்படைத்திருப்பதை மறந்துவிட்டாயா? இல்லாவிட்டால் திசை தெரியாத இந்தப் 'பெரிய கோட்டை'—கிராமத்தில் நாம் ஏன் வாழப்போகிறோம்...என்ன திலகா இன்றைக்கு இப்படிப் பேசத்தலைப் பட்டுவிட்டாய்!''

திலகவதி மறுபடியும் அழுதாள். தேம்பித் தேம்பி அழுதாள்.

''கனகம் உங்கள் சொல்லைத் தட்டமாட்டாள்; நீங்கள் எதைக் கேட்டாலும் கொடுப்பாள். எனக்காக நீங்கள் அவளிடம் ஒன்றைக் கேட்கமுடியுமா அத்தான்!'' திலகவதி தயவாகப் பேசினாள்.

''இதற்குத்தானா இப்படித் துடிக்கிறாய்! நீ கேட்டால்கூட அவள் தருவாள். என்னவேண்டும் திலகா உனக்கு! இப்போதே கேட்கிறேன். சொல்லு திலகா!'' என்று அழுத்திக்கேட்டார் நாரணர்.

''கேட்கிறீர்களா அத்தான்! தவறாமல் கேட்கவேண்டும்; நிச்சயமாகக் கேட்கவேண்டும். அத்தான் அவளுக்கு எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் கொடுப்போம். எந்த நகை வேண்டுமானாலும் தருகிறேன். அவள் எனக்கு ஒன்றை மட்டும் தந்தால் போதும்!''

''திலகா!''

''ஆம்! அத்தான்; அவளிடம் பிச்சை கேட்கிறேன். அவளுடைய குழந்தையை மட்டும் எனக்கு வாங்கித் தாருங்கள் அத்தான்! உங்களுக்குக் கோடிபுண்ணியம் உண்டு! அத்தான்! அத்தான்!''—அவள் பேச்சில் பொறி பறந்தது.

நாரணருக்குத் தலை சுற்றியது' மூளை குழம்பியது.

திலகவதி அழுகையை நிறுத்தவில்லை. நாரணரின் மடியில் சாய்ந்து புலம்பிக்கொண்டே இருந்தாள்.

இந்த நேரத்தில் கொல்லைப் பக்கமாக யாரோ ஓடும்சத்தம் கேட்டது. திலகவதி கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

நாரணர் வேல்கம்பை எடுத்துக் கொண்டு கொல்லைக்குப் போனார். அங்கே—உள்முற்றத்தில் கனகம் படுத்திருந்தாள். அவளருகில் கைக்குழந்தை நீலமணி தூங்கிக் கொண்டிருந்தது.

''கனகம்!''

''எல்லாவற்றையும் நான் கேட்டுக்கொண்டுதானிருந்தேன்!''

''என்னை என்ன செய்யச் சொல்கிறாய் கனகம்!......என் நிலை இப்படி வருமென்று நான் நினைக்கவே இல்லை. சிவகங்கையை முற்றுகையிடப் பகைவர்கள் நேரம்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கவலைகூட இப்போது எனக்கு எழுவதில்லை......தொடக்கத்திலேயே நான் ஏமாந்துபோனேன் கனகம்.''

கனகம் பதில்பேசவில்லை. அவளுடைய அடக்கம் நிறைந்த அமைதியில் சமுத்திரம் போன்ற கதை அடங்கியிருப்பதுபோல் தெரிந்தது.

''இனிமேல் நான் இங்கு தங்குவது முறையல்ல! பொழுது விடிந்ததும், அக்கா மீண்டும் உங்களைத் தொந்தரவு செய்வார்கள். நான் போய்விடுகிறேன்''—கனகம் கண் கலங்கச் சொன்னாள்.

''எங்கே போகப்போகிறாய்! என்னை விட்டுப் பிரிந்துபோகப் போகிறாயா கனகம்?''

''இல்லை. சக்கந்திக்கே போய்விடலாம் என்கிறேன். முன்புபோல் நீங்கள் அடிக்கடி அங்கே வந்தால் போதும். அப்பாவும் சந்தோஷப் படுவார்.''

''என்ன கனகம் உளறுகிறாய்; முன்பு நான் திருமணமாகாதவனாக இருந்தேன். நினைத்ததும் சக்கந்திக்கு வரமுடிந்தது. இப்போது என் நிலை அப்படியா இருக்கிறது! அதற்காகத்தானே உன்னைப் பெரியகோட்டைக்கே கூட்டி வந்திருக்கிறேன். கனகம், எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. திலகவதியிடம் உண்மையைத் தெரிவித்துவிட்டால் குழந்தையைக் கேட்கமாட்டாள். வேற்றுமை காட்டாமல் குழந்தையை வளர்ப்பாள்'' நாரணர் மனம் திறந்து பேசினார்.

குழந்தை நீலமணி நாரணரின் மீசையைப் பார்த்துச் சிரித்தது. கனகம் எங்கோ திரும்பிக்கொண்டிருந்தாள். நாரணர் எண்ணத்தில் அவளுக்கு விருப்பமில்லை போலும்!

இப்போது திலகவதியின் படுக்கையறைக் கதவை யாரோ திறப்பதுபோல் இருந்தது.

''ஸ்...ஸ்...அக்கா விழித்துக் கொண்டிருக்கிறார்கள்; மெள்ளப் பேசுங்கள்'' என்றாள் கனகம்.

நாரணர் எட்டிப்பார்த்தார். அவருக்குத் தூக்கிவாரிப்போட்டது. அதுவரை பேசியதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு அப்போதுதான் திலகம் படுக்கையறைக்குள் போய்க்கொண்டிருந்தாள்.

''கனகம், போய்ப் படுத்துக் கொள்! திலகம் இன்னும் தூங்கவில்லை. நான் போகிறேன்.''

*

மறுநாள் காலை—நாரணர் குதிரைப்படையைச் சரிபார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினார். திலகம் வாசலிலேயே காத்திருந்தாள்.

''திலகம்!''

''அத்தான்!''

''வா, கொல்லைப்பக்கம் போவோம்!''

''அங்கே கனகம் இருப்பாளே!''

''அவள் குறிப்பறிந்தவள். நம்மைக் கண்டதும் முகப்புக்கு வந்துவிடுவாள்'' என்றார் நாரணர்.

இருவரும் தென்னஞ்சோலைக்குப் போனார்கள்.

''என்ன அத்தான், கனகத்தைக் கேட்கப்போவதில்லையா?''

''இதை வேறு கேட்கவேண்டுமா? நீலமணியை உன் பிள்ளை மாதிரி வளர்த்துவிட்டால் போகிறது!''

''ஊ...ஹூம்! ஒரு வார்த்தை அவளிடம் கேட்டால்போகிறது. நமது சொத்துச் சுகம் எல்லாம் நீலமணிக்குத்தானே கொடுக்கப் போகிறோம்!''

(9-ம் பக்கம் பார்க்க)

நற்றிணைக் காட்சிகள்

துடிப்போடு விளங்கிய "அவன்" ஒருநாள் துவண்டு கிடந்தான். சோர்ந்து இருந்தான், எதிலும் பற்று இல்லாதவன்போல், காற்றில் மிதக்கும் பொருள்போல் பற்று இல்லாமல் இருந்தான். அவனுக்கு என்ன வந்துற்றதோ என்று அவனுடைய "நண்பன்" கவன்றான். எப்பாடுபட்டேனும் துயரத்தைத் துடைக்கவேண்டும் என்று விரும்பினான். விரும்பினால் மட்டும் போதுமா? துயரத்திற்குக் காரணம் என்ன என்று அறிந்து கொள்ள வேண்டாமா? அவனையே கேட்டான். அவனும்தான் நண்பனிடம் சொல்லாமல் வேறு யாரிடம்தன் குறையைச்சொல்லிடுவான்? அவனுக்கு என்னதான் குறை? உணவோ, உடையோ, உறையுளோ அல்ல—அவன் குறை உள்ளத்துக் குறை. என்ன அது? அவனே சொல்கிறான்;

நண்ப! அதோ அந்தக் குன்றின் கீழ் ஒரு சின்ன ஊர் இருக்கிறது அல்லவா? அந்த ஊரில்—என்ன சிறப்புத்தெரியுமா? அங்கே குரங்குகள்கூட நடனம் பயிலுகின்றன. ஆம். ஒருநாள், விறலி ஒருத்தி இரண்டு கம்புகளுக்கு இடையே இழுத்துக் கட்டப்பெற்ற கயிற்றின் மீது நின்று ஆடினாள். அவள் ஆடலுக்கு ஏற்பக் கீழே நின்ற குழுவினர் பாடலும் தாளமும் இசைத்தனர். ஊரார் எல்லாரும் கூடிநின்று கண்டு களித்துச் சென்றனர். அவர்கள் ஆடி முடித்த பின், கயிற்றைப் பிறகு அவிழ்த்துக் கொள்ளலாம் என்று சென்றுவிட்டனர். அப்போது அங்கே ஒரு குரங்கு வந்து அந்தக் கயிற்றின்மேல் விறலி ஆடியதைப் போலவே ஆடிட முயன்றது. அதைக் கண்டு ஊர்ச் சிறுவர்கள் எல்லோரும் கைதட்டி ஆரவாரித்தனர். இப்படிப்பட்டது அந்தச் சிற்றூர். அந்த ஊரில் உள்ள "அவள்"தான் என் துயரத்திற்குக் காரணம். என் நெஞ்சு அவளிடம் தான் உள்ளது" என்றான்.

(நற். 95).

* * *

அவன் அவளிடம் கொண்ட காதல் கைகூடியது. இருவரும் இணைந்து இன்பம் கண்டனர். காதல் வெளிப்படுமாறு உரையாடிக்கொண்டிருந்தனர். தழைத்துப் படர்ந்திருந்த ஒரு புன்னை மரத்தின் கொழுத்த நிழலில் அவர்கள் இருந்தனர். கரைகடந்த ஆர்வத்தோடு உரையாடிக்கொண்டிருந்த "அவள்" திடுமென ஊமையானாள். "அவன்" என்ன காரணம் என்று எத்தனையோ வகையாகக் கேட்டான். வாயைத் திறந்து 'அவள்' ஒரு சொல்லும் சொல்லவில்லை. கேட்டுச் சலித்த அவன் சற்றுப் பொறுத்து அங்கு வந்த தோழியிடம் இந்த நிகழ்ச்சியைச் சொல்லிக் காரணம் கேட்டான். தோழி கலகலவென நகைத்து, "தமக்கை முன் தங்கைக்கு வெட்கம் இராதா?" என்றாள்.

> சங்க இலக்கியங்களுள் ஒன்றான எட்டுத்தொகை என்ற தொகுப்பில் "நற்றிணை"யும் ஒன்று. இது அகப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டதோர் தொகுதி. தமிழருடைய காதல் வாழ்வினையும் இல்வாழ்க்கையினையும், சில பழக்க வழக்கங்களையும் இந்நூலின் வாயிலாக அறியலாகும். சில பாடல்களைத் தேர்ந்தெடுத்து "அவனும் அவளும்" கண்டு, காதலித்து, இல்லறம் நடத்தியதை இப்பகுதியில் தந்துள்ளோம்.

"தமக்கையா? நாங்கள் புன்னை மரத்தின் நிழலில் தனியாக அல்லவா இருந்தோம்" என்றான் அவன்.

"அந்தப் புன்னைதான் அவளுடைய தமக்கை" என்றாள் தோழி.

அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. தோழி விளக்குகின்றாள்:

இவளுடைய தாய் சின்னப் பெண்ணாக இருக்கும்போது விளையாட்டாகப் போட்டுவிட்டுப் போன விதையிலிருந்து இந்தப் புன்னை முளைத்தது. அதை நெய்யும்பாலும் அளித்து அந்த அம்மாள் தன் குழந்தைபோல் அன்புகொண்டு வளர்த்து வந்தார். இவள் சோறு உண்ணாமல், அடங்காமல், பிடிவாதம் பிடித்தபோதெல்லாம் "உன் தமக்கை இத்துணை பொல்லாதவள் அல்லள்" என்று சொல்லி, இந்தப் புன்னையைக் காட்டி அடக்கினார், அதுமுதல் இவள் புன்னை மரத்தைத் தன் தமக்கையாக எண்ணி வருகின்றாள்" என்றாள்.

அவன் சிரித்து மழுப்பினான்.

(நற். 172)

* * *

இப்படிப் பல நாட்கள் அவர்கள் யாரும் அறியாதவாறு பழகி வந்தனர். அவன் தன் ஊர்விட்டு அவளைக் காண வருவதற்கு அரிய வழிகளையெல்லாம் கடந்து வர வேண்டியவனாவான். அந்த வழி கல் நிறைந்தது. அந்தக் கற்கள் நடப்போரின் காதை வருத்தும்; மிகுந்திருக்கும் இருளோ கண்ணையும் குருடாக்க வல்லது; மலைப் பிளவில் உள்ள குகையில் பதுங்கி வாழும் புலி, யானையைத் தாக்கிக் கொன்று அதன் இரத்தத்தைப் பருகும். பிறகு இரத்தம் படிந்த தன் வாயை வேங்கை மரத்தின் அடிப்பாகத்தில் துடைத்துக் கொள்ளும்.

இவ்வளவு கொடிய வழிதான் என்றாலும், அதனையும் அவன் பொருட்படுத்தாமல் கடந்து வருவான். ஏன்? தன் காதலியைக் காணத்தான். அவன் உள்ளத்தில் அவ்வளவு உறுதியான காதல் இருந்தது.

(158)

* * *

ஆனால், சில காரணங்களினால் அவன் அவளைக் காணமுடியாமற்

போகும். தாய் உறங்காதிருப்பது முதல் வேறு எத்தனையோ காரணங்கள் தடையாக வந்து வாய்த்துவிடும். அப்போது அவன் படும் துன்பத்தை என்னென்பது!

அவனே சொல்கிறான், கேட்போம்.

எப்போதும் ஒலி அடங்காத கடலும் ஒலியடங்கிக்கிடக்கிறது; ஓயாமல் வீசும் காற்றும் ஒய்ந்து கிடக்கிறது; இந்தப் பெரிய ஊரில் எல்லோரும் உறங்குவதால் ஆண் கூகையும் பெண் கூகையும் கூடி நாற்சந்தியில் கூவுகின்றன; மயங்கிய இந்த நள்ளிரவில் தேமல் படர்ந்த மார்பும், பருத்த மெல்லிய தோள்களும் கொண்ட பேரழகியாகிய அவளைக்காண நான் இங்கே உறங்காமல் கிடக்கின்றேன்; நீரில் கிடக்கும் மீன்களும் உறங்குகின்றன; ஆனால் நான் மட்டும் உறங்க இயலவில்லை; என் நிலை என்ன ஆகுமோ!''

(319)

ஐயோ பாவம்! யார் அவனைத் தேற்றுவது?

* * *

அவன் நிலை அப்படி இருந்தது. அவள் கதி என்ன? உலகத்தை மறந்து குரட்டை விட்டுத் தூங்குகின்றாளா? இல்லை; அவளும் அவனைப் போலத்தான் அல்லற்பட்ட நெஞ்சினளாகத் தொல்லைப்படுகின்றாள். தன் தோழியிடம் சொல்லுகின்றாள், நெஞ்சம் நெருப்பிலே கிடந்தது போன்ற தன் நிலையை, 'தோழி, நேற்று இரவு அவரைக் காணமுடியவில்லையே என்ற கவலை வருத்த, வெப்பமான நெடுமூச்சு விட்டுக்கொண்டு, அம்புபட்டு வருந்தும் பெண்மான் போல் வருந்திருக்கொண்டிருந்தேன். அப்போது அன்னை விழித்துக் கொண்டாள் போலிருக்கிறது. "என் மகளே, நீ இன்னும் தூங்கவில்லையா?'' என்றாள். அவளுக்கு நான் என்ன சொல்ல இயலும்? 'தலைவன் வருகையை எதிர் நோக்கி இருப்போர்க்கு உறக்கம் வருமோ?' என்று என் மனதில் சொல்லிக்கொண்டேன்'' என்று தன் தோழியிடம் சொல்லுகின்றாள்!

(61)

* * *

எத்துணை நாட்களுக்கு இப்படிக் கள்ளத்தனமாகக் கடந்து இன்பம் பெற்று வாழ இயலும்? திருமணத்திற்குப் பெற்றோர் ஒப்பம் கிடைக்காதோ என்று அஞ்சிய அவர்கள் இருவரும் ஒருநாள் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் (ஆனால் தோழிக்கு மட்டும் தெரிவித்து, அவள் துணைசெய்கின்ற காரணத்தினால்) 'உடன்போக்கு' நேருகின்றனர். இந்தக் காலத்து முறையில் சொல்வதானால் 'ஓடிப்போதல்'! ஆனால் இப்போது இருக்கும் இழிந்த பொருள் அப்போது இல்லை.

அப்படிப் போகும்போது அவன், இதுநாள் வரை நிழலில் இருந்து, உடல் நோகாமல் வாழ்ந்த அவள் வருத்தம் கண்டு நொந்து தானும் வருந்துகின்றான். அவளைத்தேற்ற வேண்டுமே என்று சில சொற்கள் சொல்லுகின்றான். "உன் தந்தையின் வீட்டில், வேலைப்பாடு மிக்க அழகிய பாவைபோல் நீ இயங்கி வந்தாய். அதைவிட்டு இந்தக் காட்டிற்கு வந்துவிட்டதற்காக வருந்தாதே. இங்கு உள்ள விரைந்து செல்லும் தம்பலப் பூச்சிகளைப் பார்த்தும் பிடித்தும் சற்றுநேரம் விளையாடுக (362) புன்னைமரத்தின் தளிரை உன்மேனியிலே அப்பிக்கொள்க, குளிர்ச்சியாக இருக்கும், நிழல்கண்ட இடத்திலே நின்று இளைப்பாறுக; மணல் கண்ட இடத்திலேயெல்லாம் சிற்றில் கட்டி விளையாடுக; வழியிலே பல சோலைகள் உள்ளன; சிற்றூர்கள் உள்ளன (9) என்று அவளைத் தேற்றுகின்றான்.

* * *

இவர்கள் இங்கு இவ்வாறு இருக்க, அவள் தாய் அங்கு படும் துன்பம் சொல்லி மாளாது. 'ஐயோ, எனக்கு ஒரே ஒரு மகள் தானே, அவளும் கூரிய வேல் ஏந்திய அந்தக் கொடியவனோடு கானகம் சென்றுவிட்டாளே, இப்போது என்ன செய்வேன்? எப்படி என் துயரத்தைத் தாங்கிக்கொள்வேன்? கொஞ்சம் எண்ணிப்பாருங்கள்: அவள் விளையாடிய இடங்களைக் காணும்போது என் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறதே'' என்று தாய் தவிக்கின்றாள்!

(184)

* * *

எப்படியோ அவர்கள், அவனும், அவளும்தான் — இல்வாழ்க்கை தொடங்கிவிட்டார்கள். காதலில் வெற்றி பெற்றவர்கள், கருத்து ஒருமித்து வாழுகின்ற வாழ்க்கை எப்படி இருக்கும்? காணவேண்டாமா நாம்? நம்மால் காணமுடியாவிட்டாலும் கண்டுவந்த தோழி சொல்லுவதைக் கேட்போம், அதுவே மகிழ்ச்சிதான்.

முன்பு தலைவனின் பிரிவு துன்பம் தந்தது. இப்போது அந்தத் தலைவி இன்பத்துள் மூழ்கியுள்ளாள்.

ஆகாயம், முதலில் தீயின் வெப்பத்தைத் தருகிறது, பிறகு அந்த வெப்பம் தணிக்கவேண்டிக் காற்றைத் தருகிறது. அதுபோல் அவனுடைய மார்பு முதலில் (பிரிவுத்) துன்பத்தைத் தந்தாலும் இப்போது (வாழ்க்கை) இன்பத்தைத் தருகின்றதாம். (294) நல்ல குடும்பம்தான்! வாழ்க!

* * *

ஆனால் எத்துணை நாட்களுக்கு இந்த 'அமைதி'யான வாழ்வு! அவன் நெறியோடு வாழுகின்ற வரைதானே. ஒரு நாள் அவன் நெறிகெட்டு அலைகின்றான். அவள் வருந்துகின்றாள். தோழியும் உடன் வருந்துகின்றாள். அலைந்த அவன் ஒரு நாள் அடங்கி வீட்டுக்கு வருகின்றான். வந்தவனை "வா'' என்று வரவேற்பதோடு, மனம் திருந்தச் சில மாண்புரைகளையும் கூறவேண்டியிருக்கிறது. காதலில் துணைநின்ற தோழிதான் வாழ்க்கையிலும் வழிகாட்டுகின்றாள். அவனிடம் உண்மையை உரைக்கின்றாள். 'நீ விருந்தும் பரத்தையரை, வீட்டுக்கே அழைத்துவந்துவேண்டுமானாலும் வைத்து வாழ்க்கையை நடத்திப் பார். அவர்களுடைய இழிமனம் உனக்கு நன்றாகப் புலனாகும். அவர்கள் குழந்தைகளைப் பெற்று, நன்றி நிறைந்தவர்களாய், கற்போடு, எம்போல் ஆவது இல்லை என்பதைத் தெரிந்துகொள்வாய்'' (330) என்று உண்மையை எடுத்து உரைக்கின்றாள்.

ஆனாலும் அவளுடைய மனம் இன்னும் சினம் தணியவில்லை. 'என்ன செயல் செய்தான்' என்று எண்ணி எண்ணி வருந்துகின்றாள். இந்த இக்கட்டான நிலையிலிருந்து விடுபட்டு மீள 'அவ'னுக்கு ஒரு வழி கிடைக்கிறது. விருந்தினர் ஒருவர் வருகின்றார். அவரை அழைத்துக்கொண்டு வீடுவருகின்றான். என்னதான் இருந்தாலும், வெளியார் முன் குடும்ப விவகாரங்களைக் காட்டிக்கொள்ள 'அவள்' விரும்புவாளா?. குடும்ப மானம் காப்பதில் அவளும் சளைத்தவள் அல்லவே! தன் துயரத்தை

மறைத்து, பொறுப்போடு கடமைகளைச் செய்கின்றாள். அதைக் கண்டு மகிழும் தலைவன் அவள் பண்பைப் பாராட்டி வாழ்த்துகின்றான். "சேமாதிரம் அணிந்த தன் சிவந்த சிறுவிரல்கள் மேலும் சிவக்க வாளைமுக் குருத்துக்களை அரிந்து வைக்கின்றாள்; முகத்தில் அரும்பும் முத்துப் போன்ற வியர்வைத் துளிகளை முன்தானையால் துடைத்துவிடுகின்றாள். புகை எழச் சமையல் தொழில் நடக்கிறது. என்மேல் அவள் கொண்டுள்ள சினம் வெளிப்படவே இல்லை, ஆ! விருந்தின்மகிமையேமகிமை! இத்தகைய விருந்து நாளும் வரட்டும்!" (120) என்று விரும்புகின்றான்.

* * *

எத்தனை நாட்கள் இருக்கும் இடத்திலேயே இருந்து சேர்த்த பொருளையே செலவு செய்ய இயலும்? ஆகவே அவன் பொருள் தேடப் பிரிந்துசென்று "இன்ன காலத்தில் வருவேன்" என்று ஒருநாள் சொல்லிச் செல்லுகின்றான். ஆனால் என்ன காரணத்தினாலோ குறித்த நாளில் வர இயலவில்லை. அவளுடைய மனம் துன்புறுகிறது; கவலை கொள்ளுகின்றாள். சென்ற நெறியின் அருமை கண்டு கொஞ்சம் மனம் அமைதி கொள்ள முயலுகின்றாள்.

அவன வினை முடித்து வீடு திரும்புகின்றான் விரைந்து வரும் குதிரைகள் பூட்டிய தேர்தான! வேகமாகச் செலுத்தும் பாகனும் உள்ளான். ஆனால் 'அவன்" மனம் செல்லும் வேகத்திற்கு அவை இணையாகவில்லை. பாகனைத் தூண்டுகின்றான். பின்னும் விரைவாகச் செலுத்துவாயாக என வேண்டுகின்றான்.

(221)

6-ம் பக்கத் தொடர்ச்சி

"இதோ பார் திலகம், எனக்கு நீவேறு, அவள் வேறு அல்ல! இருவரும் ஒன்றுதான்! குழந்தையை யார் வளர்த்தால் என்ன! அது பிழைத்தால் போதும். இராணி நாச்சியார் அரசாங்கத்தில் நல்ல உத்தியோகம் வாங்கிக் கொடுத்துவிடவேண்டும்!"

"அத்தான்!"

"என்ன திலகம்!"

"நானும் வேலைக்காரியும் ஒன்று என்று சொல்கிறீர்கள்?"

"யார் வேலைக்காரி? கனகம் வேலைக்காரியா? தவறு திலகம்! அவள் மூத்தவள், நீ இளையவள்—இதுதான் வித்தியாசம்!"

"அத்தான்!"

"துடிக்காதே! நான் காண்டுகளுக்குமுன் அவளைச் சக்கந்தியில் கண்டேன். இடையமேனூர் காட்டில் இரண்டு புலிகள் இருப்பதாக ஜமீனுக்குத் தகவல் வந்த நேரத்தில் நான் சக்கந்திப் பக்கமாகப் போனேன். அங்கே ஒரு வீட்டில் களைப்பாற்றிக்கொண்டேன். அந்த வீட்டுக்குச் சொந்தக்காரிதான் கனகம். அவளுக்கும் எனக்கும் தொடர்பு வளர்ந்தது; உறவு வளர்ந்தது; பாசம் பிறந்தது. அதுதான் நீலமணி! திலகா, நீ நல்லவள். நீதானே என்னையே திருமணம்செய்துகொள்ளவேண்டுமென்று துடித்தாய். உன் நன்மைக்காகத்தான் நான் இந்தக் கதையை உனக்குத் தெரிவிக்கவில்லை. கனகம் இங்கு வந்தபின் தெரிவித்திருந்தாலும் தவறுதான் விளைந்திருக்கும். நீங்கள் இருவரும் ஒற்றுமையாக இருப்பீர்கள் என்பது என்ன நிச்சயம்! கனகம் ஒரு வேலைக்காரி, அவள் புருஷன் குதிரைப் பண்டையில் இருக்கிறான் என்று பொய் சொல்லி வைத்ததால்தானே நீ அவளைப் பார்த்துச் சிரித்துப்பேச முடிகிறது. திலகா, நீலமணி நம்குழந்தை!நம்குழந்தை" என்றார் நாரணர்.

திலகவதி சிரித்தாள். ஆனாலும் முகத்தில் களை இல்லை.

'நீலமணி நம் குழந்தை! வேலைக்காரி குழந்தை அல்ல! அப்பா! இப்போதுதான் என் மனம் குளிர்ந்தது!" என்றாள் திலகவதி.

இருவரும் வீட்டுக்குள் நுழைந்தார்கள். எதிரே கனகம் தேடி வந்தாள். அவள் உடம்பெல்லாம் படபடவென்று ஆடியது,

"நீலமணி எங்கே அக்கா! அக்கா என் நீலமணியைக் காணவில்லை!" என்று கதறிக்கொண்டே தேடி வந்தாள் கனகம். உடல் முழுதும் நெருப்புப்பற்றிக்கொண்டவளைப்போல் அவள் சுருண்டு சுருண்டு விழுந்தாள்.

"கனகம்'! நம் நீலமணியைக் காணவில்லையா? ஐயோ! என்னால் தாங்கமுடியவில்லையே அத்தான்!" என்று திலகவதியும் துடித்தாள்.

நாரணர் பைத்தியம் பிடித்தவரைப்போல் தரையில் சாய்ந்தார். மயக்கம் தெளியவில்லை.

ஊர் திரண்டுவிட்டது. நாரணர் கண் திறக்கவில்லை. நிற்கப் போகும் குதிரையின் குளம்படியைப்போல் அவர் நெஞ்சு மெள்ள நகர்ந்தது.

திலகவதி எழுந்தாள். கூட்டத்தை விலக்கிக்கொண்டு கிணற்றங்கரைக்கு ஓடினாள். அவள் கால்கள் பம்பரம்போல் சுழன்றன.

கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தாள். சோகம் தாளாமல் திலகவதி கிணற்றுக்குள் விழப்போகிறாள் என்று ஊர் மக்கள் அனைவரும் கிணற்றடிக்குத் திரண்டார்கள்.

திலகம் பட்டென்று திரும்பினாள். அவளை நோக்கி வந்த மக்களை நிறுத்தினாள். "குழந்தை இருக்கிறது! குழந்தை இருக்கிறது!" என்று கூவினாள். திரண்டிருந்த மக்கள் வெள்ளம் அதை எதிரொலித்தது! அந்தப் பேரொலி நாரணர் செவியைக் குடைந்தது. துள்ளி எழுந்தார். "எங்கே என் நீலமணி! எங்கே என் நீலமணி!" என்று துடித்துக் கதறிக்கொண்டே ஓடி வந்தார்.

யாரும் குழந்தையைப் பார்க்கவில்லை. எல்லோரும் திலகவதியையே பார்த்தார்கள்.

திலகவதி சிரித்தாள்.

"குழந்தை இருக்கிறது; ஆனால் பிணமாக இருக்கிறது!" என்று அமைதியாகச் சொன்னாள். அந்த அமைதியில் வஞ்சகம் இருந்தது, பாதகம் இருந்தது, வெறி இருந்தது!

நாரணர் எதுவும் பேசவில்லை. ஆனால் அவர் மனம் அவருக்கு ஒரு வினா விடுத்தது:

'நீலமணி என் குழந்தை என்று திலகவதிக்குத் தெரியாதிருந்தால் இந்தக் கொலை நிகழ்ந்திருக்குமா?"

தென்றலே சேதி சொல்லாய்!

—[கோ. தமிழ்ச்செல்வன்]—

நீலவானத்திலே நீந்திக்கொண்டிருக்கும் நெடுவெண்ணிலவே! கோலத் திரையிலே புள்ளிகளையிட்டாற் போன்ற விண்மீன்கள் காவல் புரிய, அவர்களை உன் ஏவல் செய்யவைக்கும் மாசறு தேன் மதியே! திங்களே! திகழ்கின்ற பால் நிலவே! பொங்குகின்ற புதுப்பொலிவே! போதார் நறுமுல்லை நிறத்தழகே!

வட்ட வடிவோ? வானத்து நெற்றியிலே வர்ணப் பொட்டோ? கட்டிக் கரும்பழகோ? காவியத்தின் உட்பொருளோ? எட்டி நின்று இரசிப்பேன் இவ்வாறு உன்னழகை; கிட்ட நெருங்குவதோ முடியாத செயலன்றோ!

மாதம் ஒருமுறை முழுமதியாய் வரும் சீதக் குளிர்நிலவே! வளர்ந்தும் தேய்ந்தும் வாழ்ந்தும் தாழ்ந்தும் தளர்ந்தும் தளிர்த்தும் இன்பவொளி உகுக்கின்ற அன்பு ஒளிப்பெண்ணே! அமுதவிழிக் கண்ணே! மண்புமனத் தெழுகின்ற பசுந்தமிழின் இசைப் பண்ணே!

தேய்ந்துபோன திராவிடத்தைப் போல் தேய்ந்து வருகிறாய் ஒருபுறம். உன்னத மகிமையின் உச்சாணிக் கிளையிலே அரசோச்சிய தென்னகம் போல் வளர்ந்து வருகிறாய் மறுபுறம்! வாழ்வும் தேய்வும் இயற்கை வகுத்த சட்டமோ? அல்லது உன்னுடைய வஞ்சகத் திட்டமோ?

உன் வருகையால் இருள் ஓடுகிறது; ஒளி உதயமாகிறது: மனத்துக்கண் மருள் விலகுகிறது; முகம் மலர்கிறது.

மோனத்து ஆழ்ந்திருக்கும் முகிற் கூட்டம் இன்ப வானத்து நிலவே, உன் கானத்துக் குயிலிசைக்காகக் காத்துக்கிடக்கிறது. நீ பாடுகிறாய்; ஒலியின்றி. ஆடுகிறாய் அசைவின்றி; ஆட்டுவிக்கிறாய் அநேக நெஞ்சங்களை! ஓடுகிறாய், மெல்லமெல்ல ஒருவருக்கும் தெரியாமல்; நாடுகிறாய் இன்பக் காதலனை, பலர் அறியாமல்! மூடுகிறாய் ஒளிமுகத்தை முகில்திரையால், அவ்வப்போது!

நீ பாடுவது காதில் தேன் பாய்ச்சவில்லை! உள்ளத்தில் பாய்ந்து ஊனை உருக்குகிறது: ஆனந்த வெள்ளத்தில் எமையாழ்த்தி அமைதிநிலை பெருக்குகிறது.

நிலமடந்தைக்கு எழிலூட்டும் நீலக் கடல் அலைமோதிக், கரமசைத்து அழைக்கிறது ஆர்வத்துடன் உன்னை! "கண்ணாளனே வருக! காவியப் பொருளே வருக! மன்னாதி மன்னவனே! வானத்துத் தனி அரசே! மணி விளக்கே! வியன் ஒளியே! விண்ணோர் அமுதமே! சோதியே! சொக்கும் பொன்னழகே! பால்வண்ணம் காட்டிப் பனி உதட்டில் தேன் தேக்கி மால் வண்ண மேகத்தில் மறைந்திருக்கும் எமதரசே! உறக்கத்தில் இவ்வுலகம் ஆழ்ந்திருக்கும் நேரம்; இன்பக் கிறக்கத்தில் எமையாழ்த்தி வேடிக்கை பார்க்கின்ற வெண்முத்தே; தண் கதிரே; கிழக்கே வான்வெளுத்துக் கிளர்கதிரவன் எழும்பும் வரை, ஆனந்த உலகின் அரசாட்சியை ஏற்போம்; அமைதியின் செங்கோலால் ஆளுவோம் அவனியை! எட்டாத வானத்தில் இருக்கின்றாய்; கிட்டாத பொருள் நீ; எனினும் உன்னொளி— உவகைதரு பொன்னொளி தொட்டாலே போதும் மட்டற்ற இன்பம் மகிழ்வுடனே ஊற்றெடுக்கும்; வருக, வண்ணமுகக் காட்சி தருக, எந்தன் உளமெலாம் உருக, உணர்வு பெருக!" என்று கூறி வாழ்த்தி வரவேற்று வதனம்மலர்ந்து புதுமையார்வம் பொங்கிப் புத்துணர்ச்சி தேக்கி, பொழிகதிர் நிலவே, உன்னை அழைக்கிறாள் அலைமலி கடற்கன்னி! பேர, முத்தாரங்களைச் சூட்ட முகமலர்ந்து நிற்கிறாள்; வலம்புரி முழக்கம் வாழ்த்துப்பாடி வரவேற்கும்; கயலினங்கள் உன் முன்னே மயில்நடனம் ஆடும்; சுறு மீன்கள் நீரில் புறக்கூட்டம்போல் பறக்கும்!

தேனிலவு கதிர் பாய்ச்சுகிறது தென்னகத்தின் எழில்போல! வானிலவு வண்ணமுகங் காட்டிச் சிரிக்கிறது வளநாட்டின் செழுமைபோல்! தென்றலே, வா! தேன்பாய்ச்சு; தெவிட்டாத இன்ப ஆரோச்சு! தென்பொதிகை மலைப்பிறந்த தண்பொருணை நதி தவழ்ந்து, கண்படா வழி நடந்து காட்சிக்கு எட்டாதாகிக் கட்புலனுக்கு அப்பாற்பட்டு, உணர்வுக்கே உவகையூட்டும் தன்மையுடையாய், வா! வானைப் பகலாக்கியது வட்டமதி நிலா; நீயோ, தெற்கின் தேனைப் பிழிந்து வந்து சிந்தை தனிலேற்று! நொந்த உள்ளத்தை மாற்று! வெந்த மனத்தை ஆற்று!

மரங்களை அசைக்கிறாய்; இலைகளைக் குலுக்குகிறாய்; மலர்களைச் சிலிர்க்க வைக்கிறாய்; செடி கொடிகளின் சிந்தையிலே போதையூட்டுகிறாய்; பிரிந்திருப்போரைவாட்டுகிறாய்; சேர்ந்திருப்போரைக் கூட்டுகிறாய்—இன்பத் தாலாட்டுகிறாய்; எழிற்கதிர்கள் நீட்டுகிறாய்!

தென்றல்! தேன்! தென்னகம்! மூன்றும் தமிழே. மூன்றும் இனிமையே. மூன்றும் இன்பமே.

தேன், நாவிற் சுவை பயக்கும்.

தென்றல், உடலுக்கு இனிமை.

தென்னகம், உயிருக்கு இன்பம்.

வாடைக்காற்றின் வலிமையை ஓட்டினாய்; வண்ணமலர்த்தேனுண்ண வண்டினங்களைக் கூட்டினாய்; இன்ப வழி காட்டினாய்; மோகன கீதப்பட்டால் முகமலர்ச்சியை ஊட்டினாய்; பொங்குமின்பப் போதையை மூட்டினாய்; எழில்வீணையை எடுத்துநரம்பை மீட்டினாய்!

தென்றலே! தென்குமரி எல்லையிலே கண்டாயோ அத்தெய்வத்தை! தண் கடலை நோக்கித் தவஞ்செய்யும் திகழ் மதியை; தமிழ் மொழியை! கண்டாயோ அந்தக் கண்ணில் இனியவளை; காட்சிக்குகந்தவளை; மாட்சிமை மணிவிளக்கை; விண்ணுயர் விழுப் பொருளை; வீரம் தரும் வழிப் பொருளை! அவளின் ஒளிப்பாதங்களிலே விழிப்பாதையைப் பதித்து வந்தாயா? களிப்பலையில் குளித்து, கடற்புனலில் மூழ்கி வந்தனையா? தெற்குத் தமிழெல்லை நிற்கும் பெருங் கடலில் நீந்தினையா? அரபிக்கடலும் அடல்சேர் வங்கக் கடலும் தென் பெருங்கடலைத் தேடித் தழுவுகின்ற காட்சிவிருந்து பருகினையா? முக்கடலின் கூட்டுறவாம் முக்கனியின் சாற்றினையே உண்டனையா? குமிழ்மூழும்

திரைகடலில் குடியிருக்கும் தமிழ் மொழி அமிழ்தூறும் தன் வாயால், உரைத்தது என்ன?

அவள் என்ன சொன்னாள்? அருளோவியம் கூறியது யாது?

என்ன, புலம்பலா? புன்னகையின் அழகு போயிற்றா? பெருமூச்சா? பேருவகை முகம் மலரவில்லையோ? கண்ணீரா கடல் நீலக் கண்களிலே! அந்தோ, பன்னீர் மணப் பவள உதட்டிலே நடுக்கமா?

தட்டுண்டு தடுமாறும் தன் புதல்வர் வெளிநாட்டில்வெட்டுண்டு சாய்கின்ற சேதி வேம்பாக இல்லாமல் தேங்கரும்பாகவா தித்திக்கும் அவள் செவிக்கு? கட்டுண்டு கிடக்கும் தென்னகத்தின் நிலைகண்டு, திரைகடலை முட்டுண்டு மோதி அழுது, வாழ்வு பட்டுண்ட மரமாயிற்றே எனப் பதறும் கோரக் காட்சியையா கண்டுவந்தாய்? இன்பமளிக்கும் சேதியினை இயம்பிடுவாய் என்றல்லவா எதிர்பார்த்தேன்? துன்ப அலைப் புயலில், நெடுந்தொலைவில், நடுக்கடலில், தனிப்படகாய்த் தள்ளுகின்றாயே என்னை?

அள்ளி வழங்கிய அன்னையின் பொற்கைகள்; ஆரியக் கள்ளி வழங்கிய கடுஞ்சிறையில் வாடுகின்றனவா? அந்தோ, எள்ளி நகையாடுவரே இவ்வுலகத்தார்! துள்ளி நடைபோடும் அலைக்கரங்கள் கைகொட்டிச் சிரிக்குமே;

இருக்கின்ற நிலைமாறி எழுகின்ற ஒளியோட்டும் இருட்கூட்டந்தன்னை! வாட்டம் போக்க வருவான் உதய சூரியன் என்று சொல்! நோட்டம் பார்க்கின்ற பகைவர் ஓட்டம் பிடித்திடுவர்; நாட்டமுடன் தன்நாடு காக்கின்ற நல்லிளைஞர் கூட்டந் திரண்டு விட்டது என்று போய்ச் சொல்!

இருட்டுகின்ற இராக்காலம் விரைந்தோடும்; மதி மருட்டுகின்ற மதிகேடர் மறைந்துபோவர். கண்களை உருட்டுகின்ற கள்வரெல்லாம் ஓடிச் செல்வர்; மருட்படலம் பனிபோல் மறையும்; மணிமகுடம் தமிழ்மொழி அணிமகுடமாகும்; செந்தமிழர் செங்கோல் சொந்தமுடன் அரசாளும் என்று சொல்!

கண்ணீரைத் துடை. அன்பு மக்கள் எழுச்சியினை அறிவித்திடு!

"விடுதலை பெற்றிடுவோம்; விலங்கினை ஒடித்திடுவோம்" என்ற வீர முழக்கத்திலேயே மிதந்து வேகமாகச் செல்! செல்!!

★

இரஷ்யாவின் படைக்குறைப்பு

—[அன்பு]—

இனியும் வல்லரசுகளிடையே பெரும்போர் மூளுமாயின், அது உலகமே அழியுறும் நிலைக்குத்தான் செல்லும் என்ற எண்ணம் சமீப வருடங்களாக உறுதிப்பட்டு வரும் காலம் இது. அதே சமயத்தில், போருக்கு உதவக்கூடிய நவீன சாதனங்களான அணு ஆயுதத் தளவாடங்களை வெகுவாகக் குறைத்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் உலக வல்லரசுகளிடையே உறுதிப்பட்டு வரும் காலமும் இதுதான். இதைக் கடந்த 15 ஆண்டுகளில், ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் பல்வேறு நாடுகள் நடத்திய சுமார் 660 ஆயுதக் குறைப்பு மாநாடுகள், கூட்டங்கள், பேச்சு வார்த்தைகள் நமக்குத் தெரிவிக்கின்றன!

இதுபோன்ற சூழ்நிலைகளுக்கெல்லாம் பின்புதான் இரு கிழமைகளுக்கு முன்பு இரஷ்யாவினின்றும் ஒரு இனிப்பான செய்தி கிடைத்திருக்கிறது. ஜனவரி 14-ம் தேதி இரஷ்யப் பாராளுமன்றத்தில் தனது நாட்டின் படைபலத்தில் அங்கம் வகிக்கும் மூன்றில் ஒரு பகுதி எண்ணிக்கையினர் குறைக்கப்பட்டுள்ளார்கள் எனப் பெருத்த மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே பிரதமர் குருஷ்சேவ் அறிவித்துள்ளார். இவ்வாறு 1,200,000 பேர் குறைக்கப்பட்டுள்ள இரஷ்யப் படையில் இனி 2;423,000 பேர்தான் இருப்பார்கள்.

"ஒரே கல்லில் இரு பறவைகளை வீழ்த்தியிருக்கிறார்" என்று ஜப்பானிய பாதுகாப்பு அதிகாரி அகாகி என்பவர் கூறியுள்ளது போல், இதை ஒரு இரட்டைத் திட்டமாகத் தந்துள்ளார் குருஷ்சேவ்' ஒன்று: இப்படைக் குறைப்பின் மூலம் உலக அமைதியின் மேலும், சமாதானத்தின் மேலும் தனக்குள்ள விருப்பத்தைத் தெரிவிக்கிறார், மற்றொன்று: இத் திட்டத்தால் பொருளாதார அபிவிருத்திக்கும் வழிவகுக்கிறார். இராணுவத்திலிருந்தும் நீக்கப்பட்ட அனைவரும் தேசீய நிர்மாணவேலைகளில் ஈடுபடுத்தப்படுவதோடு, அவர்களின் நீக்குதலால் இரஷ்யாவுக்கு ஆண்டொன்றுக்கு 17 பில்லியன் டாலர்கள் (1 பில்லியன் என்பது அமெரிக்காவில் 100,000,000) மிச்சப்படுகிறது.

1957-ல் நடந்த கிழக்கு—மேற்கு ஆயுதக் குறைப்பு மாநாடு ஒன்று, எந்த நாடும் 2,500,000 பேருக்கு மேல் எண்ணிக்கையுள்ள இராணுவத்தை வைத்திருக்கக்கூடாது என்ற தீர்மானத்தை, குறிப்பாக இரஷ்யா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்காக நிறைவேற்றியது.

இதையொட்டி, இரண்டாவது உலகப்போரின்போது 12,300,000 பேர் அடங்கிய இராணுவத்தைக் கொண்டிருந்த அமெரிக்கா, 2,484,000 பேர் கொண்டதாக ஆக்கிக்கொண்டது இரஷ்யாவுக்கும் முன்னர்.

குருஷ்சேவின் சமீப அறிவிப்புக்குப்பின்னர், உலகின் ஒரே இருபெரும்வல்லரசுகளான இரஷ்யாவும் அமெரிக்காவும், 1957-ல் நடந்த மாநாட்டின் முடிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி 2,500,000 பேருக்குள் அடங்கிய இராணுவ பலத்தைப் பெற்றிருக்கும் நிலைக்கு வந்துள்ளன,

இதில் குறிப்பிடவேண்டிய மற்றொரு பொருள் என்னவென்றால், இப்போது அமெரிக்காவும் இரஷ்யாவும் இராணுவப் படையினர்எண்ணிக்கைபலத்தில் ஏறத்தாழ ஒரே நிலைக்கு வந்துள்ளன! அமெரிக்காவில் 2,484.000 பேர் இராணுவத்தினர், இரஷ்யாவில் 2,423,000 பேர் இராணுவத்தினர்!

இரஷ்யப் பிரதமர் குருஷ்சேவின் இந்த அறிவிப்பு ஒன்றின் மூலமே உலகம் அமைதியை எட்டிவிட்டது என்று கூறமுடியாது. படையினரில் மூன்றில் ஒருபதியினரைக் குறைத்திருப்பது உலக அமைதிப் பயணத்தின் ஒருமிகக் குறைந்த தூரத்தைக்கூடக் கடந்ததாகக்கொள்ளமுடியாது. ஏனெனில் இராணுவப் போரில் மனித பலத்துக்கும் எண்ணிக்கைக்கும் முக்கியத்துவம் குறைந்துவிட்டகாலம் இது. வல்லரசு நாடுகள் சில கூறிவருவதுபோல இனியும் ஒரு உலகப்போர் மூளுமாயின் பித்தானை மட்டுமே அழுத்திச் சண்டையிடும் ஒரு போராகத்தான் இருக்கும்! இதுபோன்ற வேண்டாத போர் வளர்ச்சி நிகழ்ந்து வரும் இந்நாளில் இராணுவத்தில்—அதுவும் மனித பலத்தில் மூன்றில் ஒரு பங்கைக் குறைத்திருப்பது ஒரு அமைதிப் பயணமாகாது. அமைதிப் பயணத்திற்கான ஆயத்தங்கள் பலவற்றுள் இதையும் வேண்டுமானால் ஒன்றாகக் கொள்ளலாம்.

தன்னைப் பொறுத்த வரையிலோ, அல்லது தன்நாட்டு அரசியலைப் பொறுத்த வரையிலோ நிகழப்போகும் ஒரு மாறுதலுக்கு முன்னரோ அல்லது ஒரு வளர்ச்சிக்கு முன்னரோ, ஏதாவது மற்றொரு திடீர்ச் செய்தியை வழக்கமாக வெளியிடுவார் குருஷ்சேவ்! அந்தச் செய்தி உலக அரசியல் வட்டாரங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தையோ அதிர்ச்சியையோ கொடுப்பதோடு, அதற்கு முன் தினம்வரை அதுபோன்றதொரு செய்தி முற்றிலும் எதிர்பராததாக இருக்கும். குறிப்பாக, குருஷ்சேவுக்குப் பின்னால் நின்று இரஷ்ய அரசியலைக் கவனித்து வருபவர்கள் இதை நன்கு அறியக்கூடும். வேண்டுமானால் இதற்கு உதாரணமாக அவரது அமெரிக்க சுற்றுப் பயணத்திற்கு முன் இரஷ்யா செய்து காட்டிய இரு சாதனைகளைக் கூறலாம். ஒன்று: உலகம் தன் எடையிலின்றும் சில பவுண்டுகள் எடையை இழந்தது — அதாவது சந்திரமண்டல ஆராய்ச்சியில் ஒரு புதுத் திருப்பத்தையும் ஆராய்ச்சியையும் ஏற்படுத்தியது. மற்றொன்று: பனிக்கட்டிகளை உடைத்துச் செல்லக்கூடிய "லெனின்" என்ற கப்பலை முதன் முறையாகக் கடலில் மிதக்கவிட்டது. மேலும் இரஷ்யாவின் போக்கில், மற்ற உலக நாடுகள் விரும்பாத சில நிகழும்போதும், உலக கவனத்தை அதனின்றும் திருப்பிவிட ஏதாவது ஒரு "திடீர்க் குண்"டைத் தூக்கிப் போடுவார் குருஷ்சேவ்! இம்ரே நாகி பற்றிய பிரச்சினையின் மீது எல்லா நாடுகளும் கவனம் செலுத்தியபோதும் உலகம் இதை நன்கு அனுபவித்தது!

இரஷ்யாவில் இப்போது நிகழ்ந்திருக்கும் படைக்குறைப்புப் பிரச்சினைக்கும், உலக நாடுகள், குருஷ்சேவின் வழக்கமான ஒரு "திடீர்ச் செய்தி" என்ற அளவுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. பிப்ரவரித் திங்களில் நிகழப் போகும் தனது இந்தியா, இந்தோனேஷியா முதலிய நாடுகளின் சுற்றுப் பயணத்திற்கும் மே மாதத்தில் நடக்க இருக்கும் சம்மிட் மாநாட்டிற்கும் ஒரு 'முன் வரும் மணியோசை'யாக இச்செய்தியைத் தந்திருக்கிறார் குருஷ்சேவ். இந்த அறிவிப்பு, தனக்கு அமைதியின்பால் உள்ள நம்பிக்கையின் விளம்பர ஒலியாக, இந்தியா இந்தோனேஷியா சுற்றுப் பயணத்திலும், சம்மிட் மாநாட்டிலும் இருக்கட்டும் என்பது குருஷ்சேவின் அரசியல் தந்திரமாகவும் இருக்கக்கூடும்.

ஏனெனில் ஜப்பானியப் பாதுகாப்புத் துறை அதிகாரி அகாகி என்பவர் கூறியுள்ளவாறு படைக் குறைப்பு விஷயத்தில் முக்கிய பிரச்சினையாயிருப்பது அணு முதலிய ஆயுதக் குறைப்பே தவிர, ஆள் குறைப்பல்ல. மேலும், குருஷ்சேவ் அணு முதலிய ஆயுதக் குறைப்புப் பிரச்சினைக்குத்தான் முதலில் ஒரு முடிவு கண்டிருக்க வேண்டும் என்கிறார் அவர். இதற்கேற்றவாறுதான் இருக்கிறது குருஷ்சேவ் படைக் குறைப்புச் செய்தியை வெளியிட்ட "தினமே நிகழ்த்தியிருக்கும் பேச்சின் மற்றொரு பகுதியும்: "ஹைட்ரஜன் அணு முதலிய ஆயுதத் தயாரிப்புகள் இன்னும் இரஷ்யாவில் தொடர்ந்து நடந்துகொண்டு தான் வருகின்றன."

எனவே குருஷ்சேவ் இப்போது செய்திருப்பது ஆள் குறைப்பே தவிர, அணு ஆயுதக் குறைப்பல்ல. என்றாலும் உலக அமைதியின்பால் நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் அனைவரும் இரஷ்யப் பிரதமரது வரவேற்கக்கூடிய இச்செயலுக்குப் பாராட்டளிக்கத்தான் வேண்டும்.

இப்படியாக *1960*-ம் ஆண்டின் துவக்கம் இரஷ்யாவிலின்றும் கிடைக்கும் ஒரு சிறிது நம்பிக்கை ஒளியுடன் அமைதிப் பயணத்தைத் துவக்கியிருக்கிறது. இந்த நம்பிக்கை ஒளி வருகிற மேத் திங்களில் பாரிசில் நடக்க இருக்கும் சம்மிட் மாநாட்டின் மூலம் இன்னும் பிரகாசிக்க இருக்கிறது.

உலக வல்லரசுகள் இதுவரையிலும் தனித்தனியே 'அமைதி' 'சமாதானம்' என்றெல்லாம் பேசி வந்தன. தனித்தனியே பேசிவருவதால் பலனுமில்லை, அமைதியும் ஏற்படவில்லை என்ற காரணத்தால் சம்மிட் மாநாடு ஒன்றைப் பாரிசில் கூட்டி அதில் உலக அமைதிக்கும் சமாதானத்துக்கும் ஒரு உருவான முடிவைக் காணப் போகின்றன. நிகழப்போகும் அந்த மாநாடுதான் உலக அமைதிப் பயணத்துக்கு ஒரு நிலையானதும் உறுதியானதுமான துவக்கத்தைக்கொடுக்கும் என எல்லோரும் எதிர்பார்க்கின்றனர். இதுபோன்ற ஒரு நல்ல முடிவை உருவாக்குவதில் தன்னைத்தானே ஈடுபடுத்திப் பெரும் அளவு ஒத்துழைப்பைக் கொடுக்கப்போவது ஐசன்ஹோவரா, குருஷ்சேவா, டிகாலா, அல்லது மாக்மில்லனா என்பதை வரப்போகும் பாரிஸ் மாநாடுதான் தெரிவிக்க இருக்கிறது.

உலக நாடுகளிடையே சமாதானத்தை உருவாக்கப் பாரீஸ் செல்வதற்கான பயணத்தில், மாஸ்கோவின் ஆயத்தவேலைகளுள் ஒன்றுதான், பிரதமர் குருஷ்சேவின் படைக்குறைப்புச்செய்தி!

★

நன்றி

பொங்கல் நன்னாளில் எமக்கு வாழ்த்துக்கள் அனுப்பி மகிழ்வித்த அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியினை உவகையோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம். — ஆசிரியர்.

எண்ணம் ஈடேறியது!

மாக்தசபதன்

கொள்ளையனூருக்கு என்னை மாற்றியதாக உத்தரவு வந்ததும் நான் கொஞ்சம் பெருமையடைந்தேன். எங்கள் மாவட்டத்திலேயே கொள்ளையனூர் மிக்வும் பேர்வாய்ந்த ஊராக விளங்கியது. துணிவு நிறைந்த களவுகளும், அச்சமூட்டும் நிகழ்ச்சிகளும் அந்தப் பகுதியில் அன்றாடம் நடைபெறத் தவறுவதில்லை. ஆகையால் காவல்துறையிலேயே அந்தப் பகுதிக்குச் செல்வது என்றால் யாருக்கும் சற்றுத் தயக்கம் இருந்தது. புகார்களை உடனுக்குடன் கவனித்து ஆவன செய்யவில்லை என்றால், மேலிடத்து ஆணைகள் நெருக்குமே என்ற கவலை ஒருபுறமும், வம்பும் வழக்கும் நிறைந்துள்ள பகுதியில் வலியச்சென்று துன்பத்தில் சிக்கிக் கொள்வானேன் என்ற எண்ணம் இன்னொரு புறமுமாக இருந்து பலருக்கு வேதனையைத் தந்துகொண்டிருந்தது. ஆகையினால், 'கொள்ளையனூருக்கு மாறுதல் வந்திருக்கிறது' என்றால் போதும், தவிர்க்க இயலாத காரணங்களைக் காட்டி, மூன்று திங்கள் நான்கு திங்கள் விடுமுறை பெற்றுக் கொள்வதும், அந்த இடைவெளியில் யாரையேனும் 'பிடித்து' வேறிடத்துக்கு மாற்றிக்கொள்ளுவதுமாக இருந்தனர். ஆனால் நானோ 'கொள்ளையனூருக்கு மாற்றியிருக்கிறார்கள்' என்ற செய்தியைக் கேட்டுப் பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்தேன்.

காரணம் வேறு ஒன்றும் இல்லை; காவல்துறையில் பணியாற்றிப் பேரும் புகழும் பெறவேண்டும் என்பது எனனுடைய நெடுநாளைய கனவு. பெரிய திருட்டைக் கண்டு பிடித்தவன் — கொள்ளைக் கூட்டத்தை மடக்கியவன் — என்றெல்லாம் என் புகழ் வளரவேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன். அந்த ஆசை நல்லூரில் நிறைவேறும் என்று எனக்குத் தோன்றவில்லை. எல்லாரும் அவரவர் கடமைகளை ஒழுங்காக ஆற்றிக்கொண்டிருந்த அந்தச் 'சாது' ஊரில் என் எண்ணம் எப்படி நிறைவேறும்? ஆகவே கொள்ளையனூர்தான் எனக்கு ஏற்ற இடம் என்று முடிவு கட்டினேன்.

மாறுதல் ஆணையைப் பெற்ற மறுநாளே கொள்ளையனூருக்கு வந்து சேர்ந்தேன். என் பொறுப்பில் இருந்த அலுவலகத்தில் மலைபோல் வேலைகள் இருந்தன. அத்தனையையும் செய்துமுடித்து விடுவது என்று மனத்திற்குள் உறுதி பூண்டேன்.

அன்றைய மாலை ஊரின் சில பகுதிகளைச் சுற்றிப்பார்த்தேன். சின்ன ஊர்தான். இரண்டு திரைப் படக் கொட்டகைகள், சில பெரிய கடைகள்-இவையே அங்கே இருந்தன. இரவு உணவு கொண்டதும் படுக்கையில் கிடந்து புரண்டேன். உறக்கம் வரவில்லை. புதிய இடம் ஆனதினால் உறக்கம் வரவில்லை பத்து, பதினொன்று, பன்னிரண்டு, என்று இரவின் அடிச்சுவடுகளை ஒவ்வொன்றாக எண்ணிக்கொண்டிருந்தேன். இரண்டு மணியும் ஆயிற்று, அப்போதும் உறக்கம் வரவில்லை. 'சும்மா இருப்பதை விட ஊரைச் சுற்றிவரலாம்' என்று எண்ணினேன். ஒளிவிளக்கை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தேன். எனக்குத் துணை இருக்க வந்த காவலர் அயர்ந்து உறங்கிக் கிடந்தார். குறட்டை ஒலி சீராக வந்துகொண்டிருந்தது. 'ஐயோ பாவம் என்று அநுதாபம்கொண்டு அவரை எழுப்பாமலே தனியாக நடந்தேன். காவல் துறையில் இந்தத் துணிவுகூட இல்லாமல் போகுமா?

மாலை பார்த்த இடங்களில் மெல்ல நடந்தேன். மக்களின் சந்தையாக இருந்த இடங்கள் வெறிச்சென்று கிடந்தன. திரைப் படக் கொட்டகை ஒன்றின் முன் மாலையில் 'தேரும் திருவிழாவுமாக' இருந்தது. ஏதோ புதிய படம் ஒன்று அன்று வெளியாகி இருந்தது. அதனை அன்றே கண்டுவிட வேண்டும் என்று 'தீராக் காதலில்' அங்கே திரண்டிருந்தார்கள் அவர்கள் அத்தனைபேரும். இப்போது அந்த இடம் 'ஈ காக்கை' கூட இல்லாமல் வறிதே கிடந்தது. 'என்ன விந்தையிது' என்று எண்ணியவாறு மெல்ல அடியெடுத்துவைத்தேன்.

ஆனால் வைத்த அடியைப் பெயர்த்து எடுத்துவைக்க இயலாதவாறு தயங்கினேன். எதேனும் ஒன்றின்மூலம் புகழ்பெற வேண்டும் என்ற என் குறிக்கோள் ஈடேறப்போகிறது! ஆம். ஒருவன் ஒளிந்து ஒளிந்து கொட்டகையின் உள்ளே செல்லுகின்றான். அவனை நான் கண்டுவிட்டேன். நான் இருப்பதை அவன் காணவில்லை. பெட்டிக்கடை ஒன்றின் நெற்றிக்குக் கீழே ஒதுங்கினேன். என் கண் முன் ஒருவன் திருட முயலுகின்றான். மாலை நிரம்பிய பெட்டியை இரவில் உடைத்து எடுத்துவிட அவன் துணிந்துவிட்டான். ஆனால், அவன் எண்ணம் நிறைவேறுமா? நான்தான் சட்டத்தின் காவலனாகக் கண்காணித்துக் கொண்டு நிற்கின்றேனே — அது எப்படி முடியும்?

உடனே ஓடிச்சென்று அவனைக் கைதுசெய்துவிட எண்ணினேன். ஆனால் அதனால் ஒரு பயனும் இல்லை. அவன்மேல் எந்தவிதமான குற்றத்தையும் சுமத்த இயலாது. வெற்று வழக்குத்தொடுப்பதைவிட சும்மா இருப்பதேமேல். ஆகையால் குற்றம் செய்வதற்கு அவனை அநுமதிப்பது என்று தீர்மானித்தேன். திருட்டுப் பொருளோடு அவன் வெளிவரும்போது பிடித்துக்கொள்ளலாம் என்று காத்திருந்தேன். என் எண்ணம் வீணாகவில்லை. நேரத்திற்கெல்லாம் அவன் அதே வழியில் அதே போல் தயங்கித் தயங்கி வெளியில் வந்தான். நான் நினைத்தபடியே அவன் ஏதோ ஒன்றை மறைத்து எடுத்துவந்தான். அவன், நான் நின்றிருந்த இடத்தின் அருகில் வந்தான். குறிவைத்துப் பாயும் புலிபோல் அவன்மேல் பாய்ந்தேன். என் தாக்குதலை எதிர் பார்க்காத அவன் சுருண்டுவிட்டான். அவனைக் கட்டியிழுத்துக் கொண்டு—கையில் இருந்த சிறு பெட்டியையும் சுமந்துகொண்டு— காவல் நிலையம் சென்றேன்.

தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடையில் இருந்த காவலர் ஒருவரை அழைத்துக் 'கைதி'யை ஒப்படைத்தேன். பெட்டியை மேசை மீது வைத்தேன். கனமானபெட்டி. முதல் நாள் வசூல் முழுவதும் இருக்கும்போலும் என்று எண்ணினேன். நாற்காலியை இழுத்து அமர்ந்தேன்.

கைதியை விட்டுவிட்டுக் காவலர் மட்டும் வந்து நின்றார். 'என்ன? உள்ளே அடைத்துவிட்டாயா?'' என்றேன். ''இல்லை ஐயா'' என்றார். எனக்குக் கோபம் முட்டியது. ''என்ன, ஐயா, இது. நீங்கள் எல்லாம் நின்றபடியே தூங்கிக் கோட்டை விடுகின்றீர்கள். நான் இரவெல்லாம் விழித்திருந்து ஒரு ஆளைப் பிடித்துவந்தால்—இன்னும் அடைக்காமல் முன்வந்து நிற்கிறீரே — எங்கே ஐயா அந்த ஆள்?'' என்று பொங்கினேன்.

''அவர் கள்ளர் அல்லர் ஐயா அந்தக் கொட்டகையில் வேலை பார்ப்பவர்தான்'' என்றார் காவலர், மெல்லத் தலையைச் சொரிந்தவாறு,

''யாராக இருந்தால் என்ன—ஏன் அப்படிப் பதுங்கிப் போக வேண்டும்?'' என்றேன்.

''அந்தப் பெட்டியைத் திறந்து பாருங்கள்'' என்றார்.

''சரி'' என்று ஒப்புக்கொண்டு' ஏதோ ஒரு சாவியை இட்டுத் திறந்தேன்.

நோட்டுகளாகவும், நாணயங்களாகவும் உள்ளே ''புதையல்'' இருக்கும் என்று எண்ணினேன். ஆனால்!... உள்ளே ஏழெட்டு இசைத் தட்டுகளே இருந்தன! எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஏதேனும் மாயமோ? கையால் தொட்டுப் பார்த்தேன் ஆம்! இசைத் தட்டுக்கள்தாம்! ஒவ்வொன்றாக எடுத்தேன். ஐயமே இல்லை, இசைத் தட்டுக்கள்தாம்! அதிலே ஒட்டியிருந்த காகிதத்தில் அச்சடித்திருந்த வரிகளைப் படித்தேன். எப்போதோ வெளியான படங்களின் பாடல்கள் அவை. சின்ன வயதில் நான் அவற்றைக் கேட்டதாக நினைவு. இப்போது அந்தப் பாடல்கள் யார் வாயிலும் ஒலிப்பது இல்லை. யாருக்கும் அவற்றைப்பற்றித் தெரியாது. அவ்வளவு பழைய இசைத் தட்டுக்களை ஏன் அந்த ஆள் யாரும் அறியாமல் எடுத்துவரவேண்டும்? ஒரு வேளை அரிய கலைப்பொருள்களைச் சேர்க்கும் பழக்கமாக இருக்குமோ? எப்படி இருந்தாலும் தப்புத்தானே என்று எண்ணினேன். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

அந்த ஆளையே அழைத்தேன். ''ஏன் ஐயா—இவைகளைத் திருடினீர்?'' என்று கேட்டேன்.

அவர் பதறிப்போனார். ''ஐயா வாயால் அப்படிச் சொல்லக் கூடாது. நான் உண்மையைச் சொல்கிறேன். இந்தக் கொட்டகைக்கு நான் வேலைக்கு வந்து பத்து ஆண்டுகள் ஆகின்றன. 'நல்ல ஆள், நம்பிக்கையான ஆள் என்றெல்லாம், என்னைப்பற்றி முதலாளி சொல்வார். இன்று நான் செய்தது அவருக்குத் துரோகம் அல்ல' என்னால் தாங்க முடியாமல்தான் இப்படிச் செய்து விட்டேன்—இதை நீங்கள் வெளியில் சொல்லவேண்டாம்'' என்றார்.

''என்ன ஐயா, இது கதையாக இருக்கிறது? துரோகமில்லை என்கிறாய். தாங்க முடியாமல் செய்ததாகச் சொல்கிறாய். ஒன்றும் விளங்கவில்லையே'' என்றேன்.

''சொல்கிறேன் — துரையே, சொல்கிறேன். நான் வேலைக்கு வந்தபோது வாங்கியவை இந்த இசைத்தட்டுக்கள். அன்றுமுதல் இதுவரை எத்தனையோ முறை கேட்டுக் கேட்டுக் காது புளித்து விட்டது. இவை வேண்டாம், மாற்றிவிடலாம் என்று எத்தனையோ முறை முதலாளியிடம் சொல்லிவிட்டேன். அவர் ஏற்றுக் கொள்ளவே இல்லை. சுவராக, திரையாக இருந்தால் இன்னும் சில ஆண்டுகள்கூட அதே பாட்டுகளைக் கேட்டுக்கொண்டிருக்கலாம். ஆனால் என்னால் முடியவில்லை. எப்படியாவது வேறு தட்டுகள் வாங்கவேண்டிய தேவையை உண்டாக்க முயன்றேன். இந்த வழியில் இறங்கினேன். மன்னித்துக் கொள்ளவேண்டும்'' என்று மன்றாடினார் அந்தக் ''கள்ளன்''!

பெட்டியை எடுத்து உள்ளே பூட்டிவிட்டு, ''உமது எண்ணம் ஈடேறும், போகலாம்'' என்று விடை கொடுத்துவிட்டு வீடு திரும்பினேன்!

என் முதல் முயற்சி வெற்றிதான்! இல்லையா?

2-ம் பக்கத் தொடர்ச்சி

நல்ல உணவாக இட்டு; அவன் அணிந்திருந்த பழைய கந்தலை அப்புறப்படுத்தச் சொல்லிவிட்டு, நல்லாடையாக அணியச்செய்ய வேண்டும். அதுதான் தாயின் கடமை'... அகில இந்தியா என்று கூறுபவர்கள் இதை உணரவேண்டும். அப்படிச் செய்தால்தான் ஒரு தாய் வயிற்றின் குழந்தைகள் என்பதன் பொருள். அதுவல்லாது, 'என் பெரிய மகன் நன்றாக வளர்கின்றானே என்று, பொறாமைப்படுகின்றாய்! நீ பொறாமைக் குணம் படைத்தவன்!... வீட்டைத் துண்டாக்கும் எண்ணம் கொண்டவன்' என்றால் என்ன பொருள்?... இதைப்போன்று பல எளிய கருத்துக்களைப்புகுத்தி, எடுத்துக்காட்டித்தான் இவர்களிடம் (ஆட்சியாளரிடம்) கூறுகின்றோம், 'எங்கள் திராவிடத்தை எங்களிடம் ஒப்படைத்து விடுங்களென்று!' இதில் என்னம்மா தவறு இருக்கிறது? ... உங்களை நினைக்கும்போது ஒரு விதத்திலே எனக்குச் சிரிப்புத் தானம்மா வருகின்றது!... நீங்கள் தான் அடிக்கடி கூறுவீர்கள் 'எப்படியும் எங்களுடைய கொள்கையை விடாமல் புகுத்திவிடுவோமென்று!'... அதைக்கேட்டு மேலும் உற்சாகம் ஏற்படும். அந்த உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய நீங்கள் தாயாக இருக்கும்போது, என் போன்ற இளைஞர்களுக்கு ஏனம்மா கவலை? எங்கள் கொள்கை நாடெங்கும், நகரெங்கும் பரவட்டும்!... அந்த உணர்ச்சி, என்று எல்லோர் உள்ளங்களிலும், கொந்தளிக்குமோ அன்றுதான், நமது நாடு நம்முடையதாகும். அன்றுதான் நாமும் விடுதலையடைவோம்! அன்றுதான் நமது உள்ளங்களிலே மகிழ்ச்சி பொங்கும்!

இக்கடிதத்தை மேலும் நீட்ட வேண்டுமென்ற ஆவல் இருக்கின்றது, ஆனால் நீங்களும், அல்லியும் சோர்வடையக்கூடாது என்பதற்காக, இத்தோடு முடிக்கின்றேன். மற்றவற்றை அடுத்த கடிதத்தில் குறிப்பிடுகின்றேன்.

வணக்கம் அம்மா!

இங்ஙனம்,
கரிகாலன்.

நினைவுச் சித்திரம்

அன்று விடுமுறை நாள். சிந்தை கவர்ந்தவளைக் காணச் சிதம்பரனார் பூங்கா சென்றேன். நிலவைச் சுற்றித் தாரகைக் கூட்டம்! ஆமாம்! தோழிகள் புடைசூழ அமர்ந்திருந்தாள்! பொல்லாத தோழிகள்! என்னைக் கண்டதும் எங்கோ சென்றனர் — அவளைத் தனிமையிலே விட்டுவிட்டு!

இதயத்தைச் சுண்டும் இள நகையை உதிர்த்துவிட்டு என்னைப் பார்த்தாள்.

"அருள்..."— குயில் கூவியது!

"முல்லை..."--என்னை மறந்தேன்!

"காதலும் கல்யாணமும் இரு துருவங்களா?"—அவள் வினவில் இன்னல் இழையோடியது.

"இரு துருவங்கள் தான்—சராசரி மனிதர் வாழ்வில்! ஆனால், அன்பே, நம் வரையில் இணைந்த துருவங்கள்! முல்லை, உனக்காக எதையும் செய்யத் தயங்காத என்னையே சந்தேகிக்கிறாயே!"

"இல்லை அத்தான்; இல்லை! கவையில் படித்தேன்; கருத்தைக் கேட்டேன்".

"கருத்தால் குருடாகி — கயமையின் உருவாகிக் கபோதிபுர வாழ்வு நடத்தும் கசடர்களால், சாதிவெறி கொண்டலையும் சமுதாயத் துரோகிகளால்; மாடியும் குடிலும் இணையக் கூடாதே என்ற மனமாச்சரியத்தால் எத்தனையோ காதலர்கள் கல்லறையில் தூங்குகின்றார்கள்! கண்ணீரில் கரைகின்றார்கள்! ஆனால், எவர் எதிர்ப்பினும், அதை எருவாக்கிக் காதல் பயிரை வளர்ப்போம்! கலக்கம்விடு, கண்ணே!"

"உங்கள் மனநிலை உணராமல் கேட்டுவிட்டாள் முல்லை! மன்னியுங்கள்",

"மன்னிப்பா! யார், யாரை மன்னிப்பது? உன் குறும்பு மட்டும் குறையாது இல்லையா?"

"ஆமாம்! உங்களுடன் குறும்பு செய்யாமல் வேறு யாரிடம்...?"

"ஏன், மணமாகிக் குழந்தை பிறந்தால் அதனிடம்..."

"போதுமே...!" நாணத்தால் முகம் சிவக்கத் தலைகுனிந்தாள்.

தோழிகள் வரவே, தோகை மயிலாளிடம், விழியால் விடைபெற்று விடுதி சென்றேன்.

*

பல்கலைக் கழகத் தேர்வுமுடிந்து விட்டது. இனி விடுமுறை... எங்கள் சந்திப்புக்கு இடைவெளி! இதயத்தைத் தேற்றிக்கொண்டு பூங்கொடியாளைக் காணப் பூங்கா சென்றேன். வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தாள், முல்லை.

"விடுமுறையில் ஊர் செல்கிறீர்களா?"—விம்மலுடன் கேட்டாள்.

"எங்கு சென்றாலென்ன? ஏந்திழையே, மறந்தா விடுவேன்? மறக்கத்தான் முடியுமா?"

சா. சதாசிவம்

"அதுபோதும்! அடிக்கடி மடல் விடுத்து மனத்துயர் தீர்ப்பீர்களா?"

"வேடிக்கையான கேள்வி! வேறு வேலை என்ன இருக்கிறது—அதைத் தவிர? அடடே... உன்னிடம் சொல்லவில்லையே' இது தான் என் முகவரி. அந்திநேரச் சிந்தனையை அஞ்சல்வழி அனுப்பிவிடு! அன்பே, விடைகொடு!"

நெஞ்சு கவர்ந்த நேரிழையாள் நெஞ்சில் முகம் புதைத்து விம்மினாள்! விழிக்கடையில் தெறித்து நின்ற நீர் முத்துக்களை விரல்களினால் சுண்டியெறிந்துவிட்டு, ஏறிட்டுப் பார்த்தேன்—எழில்முகத்தை! சோகரேகைகள் பின்னிக்கிடந்தன!

"கண்கலங்கும் கோழை மனம் வேண்டாம் முல்லை! கல்யாணப் பந்தலிலே இணைவோம் கண்ணே! மண்ணகத்தில் மனம் கலந்த நமைப்பிரிக்க, மனிதர்வரின் எதிர்த்து நிற்போம்; எதையும் தாங்கும் திண்மை நெஞ்சம் பெறல் வேண்டும்; கவலை வேண்டாம்! திருமுகத்தில் இழையோடும் சோகம் நீக்கி, எண்ணத்தின் மின்னொளியே! விடைகொடுப்பாய்! ஏங்காதே என்னுயிரே! எழுநீ, போவோம்!"

மனமின்றிப் பிரிந்துசென்றேன். மங்கையவள் திங்கள் முகம் வாடிய பூவாகுமுன்னர், தேடிவந்து காண, எண்ணமிட்டு ஊர் சென்றேன்.

*

இரவில் உறக்கமில்லை; இதயத்தில் சோகவெள்ளம்! ஆமாம், பத்துக் கடிதங்களுக்கும் பதிலே இல்லை! மறந்துவிட்டாயா, முல்லை, சே... என்னசந்தேகம்! எங்காவது சென்றிருப்பாள் — அப்படித்தான் ஆறுதல் பெற்றேன்!

"சார், போஸ்ட்"—குரல்கொடுத்தான் தபால்காரன். உறையை வாங்கி ஆவலுடன் பார்த்தேன். அவள் தான் எழுதியிருந்தாள்.

அன்பே!

என்னை மன்னிப்பீர்களா? நீங்கள் புறப்பட்ட அன்றிரவே என் வாழ்வில் கருமேகம்சூழ்ந்துகொண்டது! நம் காதலை எடுத்துரைத்தேன். எரிமலையானார் தந்தை! "மதம் மக்களுக்கு அபின்" என்றீர்கள். அந்த மதப்போதையில் மதிமயங்கிவிட்டார் தந்தை. சீறி விழுந்தாள் சிற்றன்னை! அறையில் அடைக்கப்பட்டேன். நீங்கள் எழுதிய கடிதங்களைத் தந்தை படித்தார்! உங்கள் எழுத்துக்களைப் பார்க்கக்கூட முடியவில்லை. ஆம்; நெருப்பிலே கருக்கிவிட்டார்! கடிதங்களை மட்டுமல்ல, காதலையும்தான்!

ஏமாற்றம் என்பேனா? எதிர்பாராதது என்பேனா? ஏன் பிறந்தேன் பெண்ணாக? உங்கள் உள்ளத்தை வாட்டி வதைப்பதற்கோ நான் பிறந்தேன்!... பாலைவனச் சோலையாக என் நெஞ்சம் கவர்ந்

தீர்கள்! அந்தச் சோலைத் தென்றலை அனுபவிக்கு முன்னால் புயல் புகுந்துவிட்டது! பூங்கொடியும் சாய்ந்துவிட்டது! மீளமுடியாத சோகச் சுழலில் சிக்கிவிட்டேன்! இதய வீணையை — அதன் நாதம் எழுப்பும் காதல் நரம்புகளை அறுத்தெறிந்து விட்டனர்! சூன்யம்!— அதுதான் என் வாழ்வின் சுடர் விளக்கோ?

பேதை மனம் நடுங்குதத்தான்! பேனாவும் நடுங்குகிறதே! எனக்குத் திருமணம்! இல்லை; பட்ட கடனுக்காக விற்கப்படுகிறேன்! பட்டுவிட்டது வாழ்க்கை! அறைக் கைதியாக அல்லற்படும் நான் மீண்டும் உங்களைக் காண்பேனா? வேண்டாம்! எனக்காக, எதையும் செய்யத் துணிவுகொண்ட உத்தமர் நீங்கள்! நான்...அன்றே தெரிந்திருந்தால் உங்களுடன் வந்திருப்பேன். இன்று...கூண்டுக் கிளியானேன்! மாண்டுவிட்ட மனத்துடனே அடைபட்டுக் கிடக்கும் வெறும் கூடு! வேகாத சவம்! என் உள்ளம் உங்களுக்கே சொந்தம்! சாவைத் தவிர யாரும் தீண்டமுடியாது! நம் அன்பின்மேல் ஆணை! என்றேனும் ஒரு நாள் உங்களைப் பார்ப்பேன் என்று நம்பிக்கையில் உயிர் வாழ்கிறேன்.

உங்கள்,
முல்லை.

"முல்லை!"—உரக்கக் கூவினேன். உணர்விழந்தேன்! காதல் மலரைக் கிள்ளி எறிந்துவிட்டனரா, கபோதிகள்! என் முல்லையை இழந்துவிட்டேனா? நிலவில்லா வானம்தானா என் வாழ்க்கை! அழித்துவிட்டனரா—நினைவுச் சித்திரத்தை? இல்லை; அதை அழிக்க யாராலும் முடியாது! அழுதழுது விழி சிவக்க அனலிடைப் புழுவாகத் துடித்தேன்; துவண்டு வீழ்ந்தேன்!

மணப்பெண்ணாக மாதா கோயிலில் நிற்கிறாளே, முல்லை! மலர்ச்சி இல்லையே முகத்தில்! மணமகன் யார்? பார்த்தேன்; பதை பதைத்தேன்.

கிழட்டுப் பூனைக்கும் கிளிக்கும் கல்யாணம்! ஏ, கொடுமை நெஞ்சக் கிழவர்களே! கொத்தி எறியாதீர்— கோதையரின் வாழ்வை!

வாலைக்குமரி முல்லை எங்கே? வயோதிகத்தின் விளிம்பில் நிற்கும் விக்டர் எங்கே? பொருந்தாத் திருமணம்!

"அருள்...என்னை மறக்கமாட்டீர்களே!"...ஏக்கத்தோடு கேட்டாள்.

என்னால் பேச முடியவில்லை! இரண்டு சொட்டுக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, இல்லை என்று தலையசைத்தேன். பெருமூச்சை விடையாகத் தந்துவிட்டுக் காரில் ஏறிக் கொண்டாள்.

கார் எழுப்பும் புழுதி மறைந்துவிடும். அவள் வாழ்வில் படிந்துவிட்ட புழுதி...?

காலம் அவள் கணவனைக் கல்லறைக்குள் புதைத்துவிட்டது. அந்தச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியுற்றேன். ஆற்றுவார் யார்? தேற்றுவார் யார்?

மாடி வீடுதான் அது! ஆனால் மகிழ்ச்சியில்லை அங்கே! எப்படி இருக்கமுடியும்? கட்டாயக் கல்யாணங்கள் — பொருந்தாத் திருமணங்கள் நடக்கும்வரை, பெண்கள் பேசும் பதுமைகளாக நடமாடுவதைத் தவிர வேறு என்ன செய்வது?

மணல் வெளியில் மலர்க்கொடி போல், படுக்கையில் துவண்டு கிடந்தாள், முல்லை.

"முல்லை! உன்னை இந்தக்கோலத்திலா காணவேண்டும்? இளமையிலேயே இத்தனை இன்னல்களா! வேதனையால் வெந்துவிட்டாயே, முல்லை"

"அருள்!......வாருங்கள்......உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். சிந்தை கவர்ந்தீர்கள்; சிரிக்கப் பேசினீர்கள்! நன்றி உடையவள் நான். என் ஒரே ஆசை — அது நிறைவேறினால் அமைதியாகச் சாவேன்!"

"அப்படியெல்லாம் சொல்லாதே முல்லை! என் வாழ்வில் வசந்தமாக வந்தாய்! இன்று வாடிய பூவாகச் சிதைந்துவிட்டாய்! உன் ஆசை என்ன?"

"உம்.....ஒன்றுமில்லை......எனக்காக உங்கள் வாழ்வையே பாழாக்குவதா? அருள்!......திருமணம் செய்துகொள்ளுங்கள்! வாக்களித்தால் என்மனம் நிறையும்"

"மண்மா! உன்னைத்தான் காதலித்தேன். என் உள்ளத்தின் நினைவுகளில் சித்திரமானாய்! அதை அழித்துவிடச் சொல்கிறாயா, முல்லை! முடியுமா என்னால்! நீ விரும்பினால் மீண்டும் நம்வாழ்வு மலரும்..."

"நான் எப்பொழுதோ செத்துவிட்டேன்...இளமை, இன்பம், காதல், அத்தனையும் மடிந்துபோனபின் மலருமா என் வாழ்வு! நான் உணர்வில்லா மரக்கட்டை! —உயிரூட்ட முடியாது! மரணவாசலில் நிற்கும் முல்லையின் கனவை நனவாக்குங்கள்! உங்களுக்குப் பெண் பிறந்தால் என் பெயரை நினைவுச்சின்னமாக—நம் அன்பின் அடையாளமாகச் சூட்டுங்கள்!"— அவள் குரல் கம்மியது. என்னையே பார்த்தாள்.

"நீ இறந்தபின் எனக்கேன் வாழ்வு?"

"ஐயோ அப்படிச் சொல்லாதீர்கள்! நீங்கள் வாழவேண்டும்—அப்போதுதான் என் நெஞ்சம் நிறையும்..." இறுதியாகக்குரல்தேய்ந்துவிட்டது!

இனி அந்தக் குரலைக் கேட்க முடியாது! ஐயகோ! சோக நாடகத்தை அரங்கேற்றி ஆனந்தப்படும் காலமே! உன் வெறி தணிந்ததா? நினைவுச் சித்திரத்தை அழித்துவிட்டோமென்று நினைக்கிறாயா? இல்லை; அது என் உயிரோடு கலந்துவிட்டது!

பூவையின் புனித நெஞ்சின்மேல் விழிநீர் தெறித்து விழுந்தது! அமைதியான அந்த முகத்தைக் கடைசியாக ஒருமுறை பார்த்தேன். அதற்குப்பின்...ஐயோ!... சவப்பெட்டிக்குள் புதைந்துவிட்டாள்!—சந்தன மேனியாள்! கண்ணீர்த் துளிகளைத் துடைத்துக் கொண்டு நடந்தேன்; நடந்துகொண்டே இருந்தேன்........

★